வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.07.2023 புதன்கிழமை | இதழ் : 228 | பக்கங்கள் : 16

## தமிழர் பிரச்னை விவகாரத்தில்
# இந்தியாவின் அக்கறையை கொழும்பு இனி வரவேற்காது!

### மோடி - ரணில் சந்திப்பின் செய்தி இதுவே பிரபல நாளிதழான தி இந்து சுட்டிக்காட்டு!

புதுடில்லி, ஜூலை 26

“இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்னை தொடர்பிலான அதன் வரலாற்று ரீதியான அக்கறைகளை இந்திய அரசாங்கம் கொண்டுவருவதை இனிமேலும் கொழும்பு வரவேற்கப்போவதில்லை என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு கூறும் மிகப்பெரிய செய்தி.”

15

## 10 தொழில்சங்கங்கள் கொழும்பில் போராட்டம்!



கொழும்பு, ஜூலை 26

கோட்டை ரயில் நிலையம் முன்பாக 10 தொழில் சங்கங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் ஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு கொள்ளையிடப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது.

வங்கி, துறைமுகம், பல்கலைக்கழகம், மின்சாரம், பெட்ரோலியம், நீர் வளங்கள், வர்த்தக

15

# 13இன் நடைமுறை குறித்த சர்வகட்சி கூட்டம் இன்று!

- தமிழரசு, கூட்டமைப்பு, கூட்டணி பங்கேற்கும்
- தமிழ் தேசிய மக்கள் முன்னணி புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 26

தேசிய நல்லிணக்கம், 13ஆவது திருத்தச் சட்டம் என்பன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் பங்கேற்கவுள் ளன.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த சந்திப்பில் பங்கேற்காது என்று அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் ஆகியோர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

இதேபோன்று தென்னிலங்கை கட்சிகளில் ஜே. வி. பியும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்காது என்று அறிவித்துள்ளது. (ஐ)



## பாப்பரசரின் பிரதிநிதி நல்லூரை தரிசித்தார்!

யாழ்ப்பாணம்,ஜூலை 26

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை பாப்பரசர் பிரான்சிஸின் பிரதிநிதி பிறாயன் ஊடக்வே, யாழ். மறை மாவட்ட முதல்வர் குரு முதல்வர் ஜே. பி. ஜெபரட்ணம் அடிகளாரும் நேற்று தரிசித்தனர்.

மத ஆடையுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குள் எம்மைத் தரிசிக்க அனுமதித்தமை மத நல்லிணக்கத்துக்கு ஒரு முன்னுதாரணம் என்று குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குள் நாட்டின் ஜனாதிபதி

15

பாண்டிச்சேரி ‘மொடல்’

## பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்துக்கு வழங்குக

### விக்னேஸ்வரன் ஆலோசனை



கொழும்பு, ஜூலை 26

இந்தியாவின் பாண்டிச்சேரியில் ஆயுதம் வழங்காத பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை போன்று 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலாம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

15

## ஏமாற்று வித்தை காட்டினால் பேச்சிலிருந்து வெளியேறுவோம்!

### எதிர்க்கட்சி தலைவர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

“ஜனாதிபதியுடனான சர்வகட்சி கூட்டத்தில் நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி பங்கேற்றாலும், இந்தக் கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில் அந்த நிமிடமே குறித்த பேச்சு மேசையை விட்டு ஐக்கிய மக்கள் சக்தி

15

## 13ஐ முழுமையாக அமுல்படுத்த சுதந்திரக் கட்சி பூரண ஆதரவு!

### பொதுச் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயா சிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில்

15

## ஓகஸ்டில் ஆரம்பமாகிறது யாழ்நிலா ரயில் சேவை!

கொழும்பு, ஜூலை 26

வடக்கு மாகாணத்தை மையப்படுத்தி புதிய சுற்றுலா ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள் ளது. இந்த ரயில் சேவைக்கு ‘யாழ்நிலா அதி சொகுசு’ சேவை என பெயரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடக சந்திப்பு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக

15

## சுதந்திர தமிழீழமா? இல்லையா? சர்வஜன வாக்கெடுப்பு நடத்துக!

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூலை 26

இலங்கை நாட்டுக்குள் எந்த தீர்வும் சாத்திய மில்லை. இதனால் சுதந்திர தமிழீழமா இல்லையா என்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்துங்கள் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்

15

# இப்படியும் நடக்கிறது

வழக்கம்போல இந்தியப் பிரதமர் இலங்கை அரசாங்கத்துக்கு 'அழுத்தம்' கொடுத்து அனுப்பியிருக்கிறார்.

தமிழ் இளைஞர்கள் தனிநாடு கேட்டுப் போராடப் புறப்பட்ட போது அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து - பயிற்சி அளித்து ஊக்குவித்த இந்தியா அப்போதுகூட தமிழீழத்துக்கு தாங்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை என்பதைத் தெளிவாக தெரிவித்ததாக கூறப்பட்டதுண்டு.

அவர்களை ஆயுத ரீதியாக வளர்த்து எடுப்பதன் ஊடாக இலங்கையை கட்டுப்படுத்தி சில விடயங்களைச் செய்யலாம் என்று நினைத்தது.

இந்தியாவின் அனுசரணையுடன் பூட்டான் தலைநகர் திம்புவில் நடந்த பேச்சின்போது தமிழ் மக்களின் அபிலாசை என்ன என்பது தெளிவாக தெரிவிக்கப்பட்டது. அந்தப் பேச்சில் கலந்து கொண்ட அனைத்து ஆயுத இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் ஒருமித்த குரலாக தமிழரின் அபிலாசையை வெளிப்படுத்தின.

ஆனாலும், இந்தியா தனது அனைத்து 'பவரையும்' பிரயோகித்து செய்துகொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர்களின் அந்த அபிலாசையை பிரதிபலிக்கவில்லை. ஆனாலும், அதனைக் கூட தென்னிலங்கை விருப்பத்துடன் செய்தது என்பதல்ல.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பலனாக கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தமும் மாகாண சபைகளும், யாருக்காக கொண்டுவரப்பட்டதோ அவர்களின் பயன்பாட்டில் பல தசாப்தங்களாக இருக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

அன்று பலம்பொருந்திய நிலையில் இருந்த ஆயுத இயக்கங்களை வைத்து இலங்கையை வழிக்கு கொண்டுவந்தபோதே, பதின்மூன்றுக்கு மேலே செல்ல இந்தியாவால் முடியவில்லை. முடியவில்லையா அல்லது விரும்பவில்லையா என்பது வேறு விடயம்.

இவை எல்லாம் உங்களுக்கும் எல்லோருக்கும் தெரிந்த சங்கதிகள்தான்.

ஆனால், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த போது, இந்தியப் பிரதமர் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். வழக்கமாக இரண்டு நாடுகளின் தலைவர்கள் சந்தித்தால் முடிவில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படுவதுண்டு. ஆனால், இந்த சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் இரு தரப்பு ஒப்பந்தங்கள் குறித்து மாத்திரமே விளக்கமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இரு தலைவர்களும் சில விடயங்களை தனித்தனியே அறிவித்தார்கள். அந்த அறிவிப்பில் இந்தியப் பிரதமர் இலங்கை தமிழர் விவகாரம் தொடர்பாகவும் குறிப்பிடத்தவறவில்லை.

ஹிந்தியில் உரையாற்றிய அவர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

'இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் குறித்தும் பேசினோம். ஜனாதிபதி விக்கிரமசிங்க சகல தரப்பினரையும் அரவணைக்கும் அணுகுமுறையை முன்வைத்தார். தமிழர்களின் அபிலாசைகளை இலங்கை நிறைவேற்றும் என நம்புகிறோம். சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்துக்கான மீள்கட்டுமான நடவடிக்கையை இலங்கை முன்னெடுக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்று பிரதமர் மோடி தனது கருத்துக்களை வழங்கினார்.

அதாவது, இலங்கை பதின்மூன்றை அமுல்படுத்தவும் மாகாண சபை தேர்தலை நடாத்தவும் உறுதிமொழி வழங்கியிருக்கின்றது என்பதையே அவர் அறிவித்திருப்பதுடன் அதனை இலங்கை செய்யும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

புதுடில்லிக்கு புறப்படுவதற்கு முன்னதாகவே பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த மற்றைய விடயங்களை அமுல்படுத்த தயாராக இருப்பதாக ரணில் தமிழ் எம்.பிக்களிடம் தெரிவித்திருந்தார். அதனை செய்வதற்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஒப்புதலைப் பெறவேண்டியிருக்கும் என்றும் ரணில் கூறியிருந்ததும் கவனிக்கத்தக்கது.

அதற்காகவே அவர் இன்று அனைத்துக் கட்சிகளையும் சந்திக்கவிருக்கிறார். அதனையே அவர் பிரதமர் மோடியிடமும் தெளிவாக சொல்லியிருக்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

பிரதமர் மோடி தனது உரையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க சகல தரப்பினரையும் அரவணைக்கும் தனது அணுகுமுறையை முன்வைத்தார் என்று தெரிவித்திருப்பது இதனைத்தான் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது.

இந்தியப் பிரதமரின் இந்த அறிவிப்புக் குறித்து நமது தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். சிலர் தமது கடிதத்தால்தான் இந்திய நிலைப்பாட்டில் மாற்றமே வந்தது என்பது போலவும் தமிழ் மக்களுக்கு கதை செல்லியிருக்கின்றனர்.

தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கே 'தோளில் தட்டி, பார்த்துச் செய்யுங்கள்' என்று கேட்கின்ற இந்தியா - அதனை நிறைவேற்றுங்கள் என்று அழுத்தமாக சொல்லக்கூடிய நிலையில் இன்று இல்லை என்பது வெளிச்சமானது.

இந்த நிலையில் தமிழர்களின் அபிலாசை என்று இந்தியப் பிரதமர் குறிப்பிட்டது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டியைத்தான் என்று நாங்கள் விளக்கம் கொடுக்க முற்பட்டால், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துகின்ற விடயத்தையும் செய்யச்சொல்லி இந்தியாவால் கேட்கமுடியாமல் போய்விடும்.!

இந்தியா நாட்டைப் பிரிக்க திட்டமிடுகின்றது என்று இப்போதே தெற்கில் குரல்கள் எழத் தொடங்கிவிட்டன.

**- ஊர்க்குருவி.**







பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி பிறாயன் ஊடக்வே ஆண்டகை குருநகர் புனித யாகப்பர் தேவாலய திருவிழாவில் நேற்று பங்கேற்றார் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பையும் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் நிகழ்வில் பங்கேற்ற மக்களையும் படங்களில் காணலாம்.

# கான்ஸ்டபிளிடம் நீதிமன்றில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, ஜூலை 26

தந்திரிமலை பொலிஸில் கடமையாற்றிய கான்ஸ்டபிளுக்கு எதிராக கஞ்சா வைத்திருந்தார் என்று பொய்யான குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்து பணி நீக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன மதவாச்சி நீதிவான் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளிடம் மன்னிப்பு கோரினார்.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் விசேட புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின் போது தந்திரிமலை பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் 850 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் போலியாக கைது செய்யப்பட்டமை தெரியவந்தது.

பொலிஸ் கான்ஸ்டபிளை பழிவாங்க இந்த கைது நடந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய அநுராதபுரம் லஞ்ச ஒழிப்புப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 7 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இந்த குற்றச்சாட்டின் கீழ் இடைநிறுத்தம் செய்வதாகவும் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தில் உறுதியளித்தார்.

தந்திரிமலை பொலிஸில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக அநுராதபுரம் லஞ்ச ஒழிப்புப் பிரிவால் தொடரப்பட்ட வழக்கை மீளப் பெறுவதாகவும், பழிவாங்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார் என்றும் அவர் நீதிமன்றத்தில் உறுதியளித்தார்.

# சாவகச்சேரி சதொச கிளையின் முன்னாள் முகாமையாளர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 26

சாவகச்சேரி லங்கா சதொச கிளையின் முன்னாள் முகாமையாளர் 74 இலட்சம் ரூபாய் பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி சதொச விற்பனை நிலையத்தின் நாளாந்த பணத்தை ஆறு மாதங்களாக வங்கியில் செலுத்தாமல் தனது தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தி இந்த மோசடியை செய்துள்ளார் என்று சதொச தலைமை பணிமனை நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சாவகச்சேரி சதொச கிளையின் மற்றோர் ஊழியர் சதொச தலைமை பணிமனைக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதனை வெளிப்படுத்தியதை அடுத்து சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பின்னர், முகாமையாளர் சதொச தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டு நடத்தப்பட்ட விசாரணையில், பண மோசடி செய்ததை ஒப்புக்கொண்டார். பின்னர், வேலையை விட்டுவிட்டு தலைமறைவாகியிருந்தார்.

இதையடுத்து, சதொச தலைவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், கெக்கிராவை பிரதேசத்தில் உள்ள தனது மனைவிக்கு சொந்தமான வீட்டில் பதுங்கியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# படுகொலையான பெண்ணின் நகையை சந்தேகநபர் அடகுவைத்தமை அம்பலம்!

கொழும்பு, ஜூலை 26

அங்குருவத் தோட்டையில் படுகொலை செய்யப்பட்ட வாசனா குமாரியின் கழுத்திலிருந்த தங்க நகையை சந்தேக நபர் ஹொரனை பிரதேசத்தில் அடகுக் கடை ஒன்றில் அடகு வைத்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் தேசிய அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு இது கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேக நபர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் இது தொடர்பிலான உண்மைத் தன்மையை உறுதியாக கூற முடியாதுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சந்தேக நபரை ஒகஸ்ட் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அங்குருவத் தோட்டையில் அண்மையில் தாயும் மகளும் படுகொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஈழநாடு
Eelanadu
26.07.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீண்டும் சிங்கள தேசியவாத எழுச்சியா?

கறுப்பு ஜூலை கொழும்பில் நினைவுகூரப்பட்டதைத் தொடர்ந்து சிங்கள கடும்போக்கு தரப்புகள் கடுமையான எச்சரிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. மீண்டும் இரத்த ஆறு ஓடுவதை அனுமதிக்க வேண்டாமென்று அவ்வாறானவர்கள் எச்சரித்திருக்கின்றனர். தென்னிலங்கையில் மீண்டும் முரண்பாடுகள் தோன்றலாம் என்று ஓமல்பே சோபித தேரர் கூறுகின்றார். மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீளவில்லை. இப்போதும் வெளிநாடுகளின் தயவையே அரசாங்கம் எதிர்பார்த்திருக்கின்றது. டொலரின் பெறுமதி தொடர்ந்தும் கூடிக்கொண்டு செல்கின்றது.

பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். இது சிங்கள தேசியவாதத்தின் மோசமான வீழ்ச்சியாகவே நோக்கப்பட்டது. ஆனால், இப்போது நிலைமைகளை உற்று நோக்கினால் இவ்வாறான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் மனோபாவத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு சூழலில் ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

பண்டா – செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து சிங்கள ஆளும் வர்க்கம் ஆகக் குறைந்த அதிகாரங்களைக்கூட தமிழ் மக்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ்த் தேசியவாதம் எழுச்சியுற்றது. தமிழ்த் தேசிய வாதத்தின் எழுச்சி முற்றிலும் சிங்கள கடும்போக்குவாதத்தின் வெளிப்பாடாகும். ஆனால், விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தமிழ் தேசியவாத அரசியல் பெரியளவில் வீழ்ச்சியடைந்து விட்டது. உண்மையில் இப்போது, தமிழ்த் தேசியவாதம் ஒரு பலமான அரசியல் போக்கல்ல. இன்றைய தமிழர் அரசியல் என்பது சிதறுண்ட கட்சிகளின் – அவற்றின் மூலம் பிளவுண்ட மக்களாகவே காட்சியளிக்கின்றது. உண்மையில், தமிழ் மக்களுக்கான ஆளுமைமிக்க தலைமை ஒன்றில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசியவாத அரசியல் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

கோட்டாபயவின் வீழ்ச்சிக்கு பின்னர் தென்னிலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகவே நோக்கப்பட்டது. அவசரப்பட்ட சில தமிழ் குழுக்கள் அறகலய என்னும் பெயரில் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியை வரலாற்றுப் புரட்சியென்று கதையெழுத முற்பட்டனர். தற்போது அவ்வாறான வாதங்கள் பெறுமதியற்றுப் போய்விட்டன. அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களைக்கூட அமுல்படுத்துவதை சிங்கள கடும்போக்கு தரப்புகள் எதிர்க்கின்றன. அதனை கண்டும் காணாமல் ஏனைய அரசியல் கட்சிகள் இருக்கின்றன. 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சிக்கு முழுமையான ஆதரவை தருகின்றோம் – என்று கூறுவதற்கு ஏனைய சிங்கள கட்சிகளும் தயாராக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் ரணிலின் முயற்சியால் விடயங்கள் நடப்பதையும் அவர்கள் விரும்பவில்லை போலும். ஏனெனில், அனைவருமே அடுத்துவரவுள்ள தேர்தலை முன்வைத்தே கூட்டிக் கழித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையை உற்று நோக்கும்போது, சிங்கள தேசியவாதம் பெருமளவில் வீழ்சியடைந்து விட்டதாகக் கூறும் வாதத்தில் பொருளிருப்பதாகத் தெரியவில்லை.

# அரசின் சேவைகளை முன்னெடுக்க மக்கள் வரி கட்டுவது அவசியமானது

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 26

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேவைகளை சீராகக் கொண்டுசெல்ல வேண்டும் என்றால் மக்கள் வரி செலுத்துவதை தவித்துக் கொள்ளக்கூடாது என வடக்கு ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வரிக்கொள்கை மற்றும் ஐ. எம். எவ். நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துவது வகையில் ஒன்றிணைந்த நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "வரியை சரியான வழிமுறையில் செலுத்துவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் வேண்டும். நாட்டின் நலன் கருதியதான இந்த நோக்கத்தை மக்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதும் இங்கே மிக முக்கியமான ஒரு விடயமாக இருக்கின்றது.

தற்போது அதிகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளிநடுகளில் இருக்கின்றார்கள். புலம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றவர்களுக்குத் தெரியும் உலக நாடுகளில் எவ்விதமாக இந்த வரி அறவீடு செய்யப்படுகின்றது என்று.

அதுமட்டுமல்லாது குறித்த வரி அந்த நாடுகளின் வருமானத்தில் எத்தகைய பெரும் பகுதியாக காணப்படுகின்றது என்றும் உணர்ந்து கொள்ள முடியும். எனவே, எங்களுடைய நாட்டிலே வரி அறவீடு தொடரில் மிக இலகுவான காரியமாக அல்லது புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

பலர் அந்த வரியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் நடைமுறைகளை கையாளுகின்றனர். எனவே நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த நாட்டிலே பல தேவைகளை நாங்கள் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற ரீதியிலும் எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதனால் இந்த வரிக் கொள்கையில் நாங்கள் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்காளர்களாக வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் முத்தமிழ் விழா சனிக்கிழமை

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முத்தமிழ் விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் சிறப்பு விருந்தினர்களாக ஐ.பி.சி. தமிழ் குழுமத்தின் தலைவர் க. பாஸ்கரன், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில், யாழ். மாநகர சபையின் கலைத்துறைக்கு வழங்கும் உயரிய விருதான அரசகேசரி விருது வழங்கப்படவுள்ளது. இயல் துறைக்காக கலாபூஷணம் கோகிலா மகேந்திரன், இசைத்துறைக்கு கலாபூஷணம் எம். பி. பாலகிருஷ்ணன், நாடகத்துறைக்கு கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் ஆகியோருக்கு அரசகேசரி விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து, பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினரின் நாதஸ்வர கச்சேரி, 'வெந்து தணிந்தது காடு' இசை நாட்டிய நாடக அரங்கு, இயல் அரங்கு போன்ற கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் "எம் மண்ணின் இன்றைய சூழலில் உயர்கல்வியும் மனிதநேயம், கலாசார பண்பாடுகளும் வளர்ச்சி பெற்றுள்ளது - வளர்ச்சி பெறவில்லை" எனும் பொருளில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

இதில் வளர்ச்சி பெற்றுள்ளது எனும் பொருளில் ச. லலீசன், கு. பாலசண்முகன், தெ. ஹர்சன் வளர்ச்சி பெறவில்லை எனும் பொருளில் ந. விஜயசுந்தரம், ந. ஐங்கரன், த. கருணாகரன் ஆகியோர் வாதிடவுள்ளனர். (ஐ- ரி)

# கிளிநொச்சியில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம்!

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத் தின் பெரும் நீர்ப்பாசன குளமாக காணப்படுகின்ற இரணைமடுக்குளத்தின் கீழ் இந்த ஆண்டு 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏப்ரல் மாதம் ஆரம்பித்த இந்த சிறுபோக நெற்செய்கையின் அறுவடையே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பன்னங்கண்டி, சின்னக்காடு, மகிழங்காடு உள்ளிட்ட இடங்களில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூலை - 26 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 10**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 12.00 - 01.30 |
| திதி | : | நவமி |

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதுசலுகைகள் கிடைக்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அமைதி நிலவும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.தலைமைக்கு நெருக்கமாவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள்.பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். அலைக்கழிக்கப்படுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மனோபலம் அதிகரிக்கும் நாள்

**மகரம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பாராத வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. அலுவலகத்தில் மரியாதை கூடும். மதிப்பு மரியாதை கூடும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

# பா. ம. கவுடன் கூட்டணி அமைக்க பேச்சுக்கு தயாராகிறது தி. மு. க.!

சென்னை, ஜூலை 25

பா.ம.கவுடன் கூட்டணி பேச்சு நடத்தும் பொறுப்பை தி.மு.கவின் மூத்த அமைச்சர் ஒருவரிடம் முதல்வர் ஸ்டாலின் வழங்கியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில், டில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் கூட்டம் நடந்தது. இதில் அ. தி. மு. க., பொதுச் செயலர் பழனிசாமி, பா.ம.க. நிர்வாகி ஏ.கே.மூர்த்தி, த.மா.கா., தலைவர் வாசன், புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பா. ம. க. தலைவரான அன்புமணி பங்கேற்காமல், ஏ.கே.மூர்த்தியை அனுப்பியதால் கூட்டணி நிலைப்பாட்டை இன்னும் பா. ம. க. உறுதி செய்யவில்லை என கூறப்பட்டது.

தேசிய அளவில் எதிர்கட்சிகள் இணைந்து, ‘இந்தியா’ என்ற கூட்டணியை ஏற்படுத்தியது போல், தமிழகத்தில் எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து கூட்டணி அமைக்க, முதல்வர் ஸ்டாலின் விரும்புகிறார்.

வடக்கு மாவட்டங்களில், 17 சட்டசபை தொகுதிகளில் செல்வாக்குள்ள பா.ம.க., அதில் இணைந்தால், நூறு சதவீதம் வெற்றி உறுதி என, முதல்வர் நம்புகிறார்.

இதைத் தொடர்ந்து, கொங்கு மண்டலத்தை சேர்ந்த மூத்த அமைச்சர் ஒருவரிடம், இது பற்றி பா.ம.க., தலைமையிடம் பேசும் பொறுப்பை, முதல்வர் ஒப்படைத்திருப்பதாக ஆளும் கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது.

(ஐ)

### கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு:

# பன்னீர்செல்வம் அணியினர் நடத்தும் போராட்டத்துக்கு அ. ம. மு. க. ஆதரவு

சென்னை, ஜூலை 26

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் விசாரணையை தீவிரப்படுத்தக்கோரி ஓகஸ்ட் முதலாம் திகதி ஓ. பன்னீர்செல்வம் சார்பில் நடைபெறும் போராட்டத்தில், டி. டி. வி. தினகரன் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் குற்றவாளிகளை தண்டிக்க, விரைந்து நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசை வலியுறுத்தி ஓகஸ்ட் முதலாம் திகதி மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கலந்து கொள்வார் என்று அந்தக் கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அ. ம. மு. க. விடுத்த அறிக்கையில்,

கோடநாட்டில் ஜெயலலிதா மறைவுக்கு பின் நடைபெற்ற கொள்ளை மற்றும் கொலை குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை ஆட்சிக்கு வந்த 90 நாட்களுக்குள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைப் பெற்று தருவோம் என வாக்குறுதி அளித்தனர்.

தற்போது, ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், இவ்வழக்கில் எந்தவித முன்னேற்றமும் இல்லாததால் அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அணியினர், தி. மு. க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் முதலாம் திகதி போராட்டம் நடத்தவுள்ளனர். இதற்கு எமது கட்சி முழு ஆதரவளிக்கும் -என்றும் கூறப்பட்டது.

(ஐ)

# விஜயகாந்த் போல அரசியலுக்கு வரநினைத்தால் விளைவு மோசமாகும்

### விஜயை எச்சரிக்கிறாரா பிரேமலதா?

சென்னை, ஜூலை 26

விஜயகாந்தைபோல் அரசியலுக்கு வர நினைத்தால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று தே. மு. தி. க. பொருளாளர் பிரேமலதா விஜய்காந்த் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது அவருக்கு விடுக்கப்பட்ட சூசகமான எச்சரிக்கையா என்று கேள்வி எழுந்துள்ளது.

சென்னை அந்தக் கட்சியின் பணிமனையில் நடந்த ஆலோசனை கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். இதன் போது, விஜயின் அரசியல் வருகை குறித்த கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர்,

யார் நினைத்தாலும் விஜயகாந்தைப் போல் வர முடியாது. அறிவுரை வழங்குவதற்கு எல்லாம் இங்கு ஒன்றுமில்லை. அரசியல் என்பது வேறு, சினிமா என்பது வேறு. விஜய் மாணவர்களுக்கு உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளார். பாராட்டுக்குரிய விசயம். விஜய் அரசியலுக்கு வருகிறாரா இல்லையா என்பது பற்றி அவர் தான் தெளிவுபடுத்த வேண்டும். அவர் சொல்வதற்கு முன் அதைப் பற்றி பேசுவது சரியாக இருக்காது.

விஜயகாந்த் எப்படி தொடக்க காலத்தில் மாணவர்களுக்கு இலவச கணினி பயற்சி உள்ளிட்ட உதவிகளை செய்தது போலவே, தற்போது விஜயும் மாணவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். அதை எப்படி பார்க்கிறீர்கள்?” என கேள்வி எழுப்பியுள்ளீர்கள்.

அனைத்து நற்செயல்களுக்கும் முன்னுதாரணம் விஜயகாந்த். தன்னால் முடிந்ததை மக்களுக்கு செய்த ஒரே தலைவர் கப்டன் தான். 40 ஆண்டுகாலம் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். கப்டனைப் போல் ஒருவர் பிறந்து வந்தால்தான் உண்டு. விஜயகாந்த் வாழ்க்கை ஒரு வரலாறு. அவர் ஒரு சரித்திரம். அப்படிப்பட்ட அவரைப்போல் அரசியலுக்கு வர நினைத்தால், அதனுடைய விளைவு மோசமாகத்தான் இருக்கும். எனென்றால் இன்று எல்லா விசயங்களுக்கும் கப்டன் ஒரு முன்னுதாரணம் - என்றார்.

(ஐ)

# கருணாநிதி நினைவு பேனா சின்னம் அமைக்கும் பணி தொடங்குகின்றது!

சென்னை, ஜூலை 26

கருணாநிதி நினைவிடத்தில் பேனா சின்னம் அமைக்கும் பணிகளை, பொதுப்பணித் துறை தொடங்கவுள்ளது.

மறைந்த கருணாநிதிக்கு, சென்னை மெரினா கடற்கரையில், 39 கோடி ரூபாய் செலவில் நினைவிடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

இறுதிக்கட்ட பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. கருணாநிதி உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், உதயசூரியன் போன்ற கட்டுமானம் செய்யப்பட்டு உள்ளது. இது, ‘லேசர்’ தொழில்நுட்பம் வாயிலாக, உதயசூரியன் உதிப்பது போன்று, இரவில் ஒளியூட்டப்பட உள்ளது.

நினைவிடத்தின் முகப்பு பகுதியில், கருணாநிதி அமர்ந்து எழுதுவது போன்று, சிலை வைக்கப்பட்டு உள்ளது. கருணாநிதி சிலைக்கு எதிரே, 100 அடியில் பேனா சிலை வைக்கும் வகையில், திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

அதை மாற்றி, கரையில் இருந்து, 300 மீற்றரில் கடலுக்குள் பேனா சிலையும், அதை காண செல்வதற்கு இரும்பு பாலமும் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அனுமதியும் பெறப்பட்டது.

தற்போது, இந்தத் திட்டம் மாற்றப்பட்டு, முன்பு திட்டமிட்டபடி, நினைவிட வளாகத்திலேயே பேனா சிலை வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேப்பியர் பாலம் அருகே, நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தையொட்டி, 55 அடி உயரத்தில், இரும்பு துாண் நிறுவப்பட்டு உள்ளது. அதே போன்று, கருணாநிதி நினைவிடத்தில் பேனா சின்னம் அமைக்கப்பட உள்ளது.

(ஐ)

# கைவேலி குடும்பங்களை மீளவும் அதே இடத்தில் குடியமர்த்த உறுதி!

## போராட்டமும் நிறைவுக்கு வந்தது

முல்லைத்தீவு, ஜூலை 26

**தாங்கள் இருந்த இடத்திலேயே தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி 20 குடும்பங்கள் நடத்திய போராட்டம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. அவர்கள் மீளவும் அதே இடத்தில் குடியமர காணிகளை பகிர்ந்தளிப்பதாக முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் அளித்த உறுதியைத் தொடர்ந்தே இந்தப் போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - கைவேலி கிராமத்தில் தாங்கள் இருந்த இடத்திலேயே தம்மை மீளக் குடியமர்த்த வலியுறுத்தி இரு நாட்களாக நான்கு பேர் உணவு தவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் முல்லைதீவ மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரிகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக காணிக்கிளை உத்தியோகத்தர்கள், வனவள திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் குறித்த இடத்துக்கு வருகை தந்து குறித்த காணிகளை பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில், மக்கள் குடியேறிய பகுதி வனவளத் திணைக்களத்தினுடைய பகுதிக்குள் இல்லை என நில அளவைத் திணைக்களத்தினர் உறுதிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து, அவர்களை அந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. (ஐ)




# கறுப்பு ஜூலை படுகொலை; வடமராட்சியில் நினைவேந்தல்!

வடமராட்சி, ஜூலை 26

கறுப்பு ஜூலை 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சியில் முன்னெடுக்கப்பட்டது.

வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 40 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதன் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் வல்வெட்டித்துறையில் உள்ள அவரின் கட்சி பணிமனையில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-2)

# வெள்ளிக்கிழமை ஹர்த்தால்; பல்கலை மாணவர்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 26

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்துக்கும் வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதில், கருத்து தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார்,

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தாலை மேற்கொள்வதுடன் அன்றையதினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பூரண ஆதரவை வழங்குகின்றது.

அதனுடன் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கும் எமது ஆதரவை தெரிவிக்கின்றோம். கறுப்பு ஜூலை வாரத்தை அனுஷ்டித்து கொண்டிருக்கின்ற வேளையிலும் எங்களுடைய தமிழ் மக்களுக்கு பாரதூரமான பிரச்னைகள் காணப்படுகின்றன.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியில்கூட பொலிஸார் மட்டுமே காணப்படுகின்றனர். சர்வதேச அமைப்புகள் ஒன்றுமே காணப்படவில்லை. இந்த அரசு எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மேலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எங்களுடைய பிரச்னையை வெளியுலகுக்கு தெரியப்படுத்தாது தங்களுக்குள்ளே மறைத்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே தமிழ் மக்களான எங்கள் பிரச்னைகளுக்கு வெளிப்படையான தீர்வு தேவை.

சரணடைந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும். அந்த வகையிலே அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் அனைத்து கட்சிகளும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் - என்றார். (ஐ)

# கைதான 9 தமிழக மீனவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் தமிழக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களின் 2 படகுகளையும் அதிலிருந்த 9 பேரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் குறித்த 9 மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சி பொது நூலகக் காணியை படைகளிடமிருந்து விடுவிக்கவேண்டும்!

## ஜனாதிபதியிடம் சிறீதரன் எம். பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறை வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை வழங்கக் கூடியதும் இந்த மாவட்டத்தின் அடையாள மாக மிளிரக்கூடியதுமான கிளிநொச்சி பொதுநூலக காணியை இராணுவத்தினரிடமிருந்து முழுமையாக விடுவிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஜனாதிபதியிடம் கையளித்த கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுள், இதுவரை கட்டமைக்கப்பட்ட நகர வடிவமைப்பை கொண்டிராத மாவட்டமான கிளிநொச்சியில், மாவட்ட செயலகத்தை மைய மாகக் கொண்டு புதிய நகர மையத்தை உருவாக்குவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலில், அத்தகைய நகர வடிவமைப்புடன் தொடர்புபட்ட பல்வேறு பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்கான காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளமை அதிகூடிய நிர்வாக மற்றும் திட்டமிடலில் இடர்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

போருக்கு முற்பட்ட காலத் தில் கரைச்சிப் பிரதேச சபை யின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி நகர பொதுநூலகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவற்றுக்குச் சொந்தமாக இருந்த 13.5 ஏக்கர் காணி போருக்குப் பின்னர் இராணுவத்தால் கையகப்படுத் தப்பட்டிருந்தது. இக்காணியில் 9 பரப்பு காணி பொது நூலகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், கடந்த 10 வருட கால போராட்டத்தின் விளைவாக அதில் 5 பரப்புக் காணி மட்டுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வடிவமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பொதுநூலகத்தை இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட அக்குறுகிய நிலப் பரப்பில் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்புடைய தரப்பினரின் திட்டமிடலிலும், செயல்பாடுகளிலும் பாதகமான தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

இதேவேளை இலங்கையில் வேறெங்கும் இல்லாத வகை யில் கிளிநொச்சி மாவட்டத் தின் பொது நூலகம் கடந்த 13 வருடங்களாக வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகிறது என்பதையும் தங்களுக்கு மிகுந்த மனவருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்பாட்டு அடையாளமாக, அதன் தோற்றத்திலும், இயங்கு திறனிலும் யாழ்ப்பாண நூலகம் எப்படி மிளிர்கிறதோ, அதே அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளத் தைப் பிரதிபலிக்கும் வகையிலான பொதுநூலகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்பது கல்விப் புலத்தினரின் நீண்ட காலப் பேரவா ஆகும். கிட்டத் தட்ட நான்கு வருடகால பிரயத்தனங்களின் மத்தியில், கரைச்சிப் பிரதேச சபையின் நிலையான வைப்பிலுள்ள நிதி யைப் பெற்று, புதிய நூலகத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

மரபியல் அடையாளங்களுடன் கூடிய பிரதான நுழை வாயில், சரஸ்வதி சிலையும் முற்றமும், நவீன வசதிகளுக் குட்பட்ட நூல்நிலையம், இணையவழி நூலகம், படிப்பகம், கேட்போர் கூடம், கணினி அறை, பூங்கா, வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட துணைக் கட்டமைப்புகளுடன் இணைந்ததாக, மன அமைதி யையும், வாசிப்பின் மீதான ஆர்வத்தையும் தூண்டத்தக்க புறச்சூழல் அமைப்புகளுடன் கூடிய பொதுநூலக கட்டடத் தொகுதியை புதிதாக நிர்மா ணிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் கைகூடியுள்ள போதும், நூலக அமைவிடத்திற்கான காணி முழுமையாக விடுவிக்கப்படா மலுள்ளதால், இவ் வேலைத் திட்டங்களை முழுமைப் படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில், காலத்துக்குக் காலம் மாற்றம்பெறும் ஒவ்வொரு அரசாங்களின் ஆட்சிக்காலங்களிலும் ஜனாதிபதி, பிரதமர், தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் சாதகமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையில், இக்காணியை முழுமையாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

# மண்டைதீவில் மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

மண்டைதீவு பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாம் ஓகஸ்ட் 8ஆம் திகதி காலை 8 மணி முதல் 12 மணி வரை மண்டைதீவு மருத்துவமனை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் இலவச நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்பியவர்கள் 12 மணிநேரம் நீர் மற்றும் உணவு என்பவற்றை எடுத்துக்கொள்ளாமல் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாமில், இலவச நீரிழிவு பரிசோதனை, இலவச இரத்த அழுத்த பரிசோதனை, யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்களின் பரிசோதனையும் மருந்து வழங்கலும் தேவையானவர்களுக்கு விசேட மருத்துவ நிபுணர்களின் பரிசோதனையும், மருந்து வழங்கலும், இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 150 பேருக்கு இலவச மூக்கு கண்ணாடியும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முட்டைக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை நீக்கம்

**கொழும்பு, ஜூலை 26**

**முட்டைக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை நள்ளிரவு முதல் நீக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.**

*இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. ஏற்கனவே வெள்ளை முட்டைக்கு 44 ரூபாயாகவும் சிவப்பு முட்டைக்கு 46 ரூபாயாகவும் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டிருந்தது.*



*இறக்குமதி செய்யப்பட்ட முட்டையை சந்தைக்கு விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் போட்டித் தன்மையில் விலையை தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)*

## ஒவ்வொரு 8 மணி நேரத்துக்கும் விபத்துகளால் ஒருவர் மரணம்!

*கொழும்பு, ஜூலை 26*

*நீரில் மூழ்குதல் தடுப்பு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிலையில், நீரில் மூழ்குதல் உள்ளிட்ட விபத்துகளால் இலங்கையில் ஒவ்வொரு 8 மணித்தியாலத்துக்கும் ஒரு மரணம் ஏற்படுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் சுகாதாரப் பிரிவினர் இதனைத் தெரிவித்தனர்.*

*வயது முதிர்ந்த ஒருவர் இறப்பதற்கு ஒரு அடி நீர்மட்டம் கூட போதுமானது.*

*இலங்கையில் வருடாந்தம் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் பேர் வரை விபத்துகளால் உயிரிழக்கின்றனர். இவர்களில் சுமார் 10 சத வீதமானோர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.*

*20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் முதியவர்களே அதிக எண்ணிக்கையில் நீரில் மூழ்கி பலியாகின்றனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

*உலகில் வருடாந்தம் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)*

## டயானாவுக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு எடுக்க பணிப்பு

### நீதி பேராணைக்கு மேன்முறையீட்டு நீதிமன்று

*கொழும்பு, ஜூலை 26*

*இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்ய உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப் பேராணையை எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.*

*குறித்த தீர்ப்பானது மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழுவால் அறிவிக்கப்படவிருந்தது.*

*எனினும், தமது தீர்ப்பிலும் நீதியரசர் மரிக்காரின் தீர்ப்பிலும் மாறுபாடு காணப்படுவதாக தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்ன தெரிவித்துள்ளார்.*

*இதற்கமைய, குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.*

*பிரதிவாதியான டயானா கமகே பிரித்தானிய குடியுரிமையை பெற்றுள்ளதால் இலங்கை அரசமைப்பின் பிரகாரம் அவர் பாராளுமன்ற உறுப்புரிமையை வகிப்பதற்கு தகுதியற்றவர். எனவே அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்துசெய்து உத்தரவிடுமாறும் குறித்த நீதிபேராணை மனுவில் மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)*

# வெளிமுக பண அனுப்பலுக்கான சில வரம்புகள் தளர்த்தப்பட்டன!

*கொழும்பு, ஜூலை 26*

*புலம்பெயர்ந்தோரின் தற்போதைய இடமாற்றங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கும் அதே வேளையில், மூலதனப் பரிவர்த்தனைகளுக்கு வெளியில் அனுப்பப்படும் சில வரம்புகளைத் தளர்த்தி புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -*

*செலாவணி வீதம் மீதான அழுத்தத்தை குறைத்து நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமையை பேணிக் காப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்கு உதவியளித்து பேணும் நோக்குடன் நிதி அமைச்சர் சில வெளிமுகப் பண அனுப்பல்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு - மட்டுப்படுத்துதவற்கு 2020.04.02ஆம் திகதி தொடக்கம் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் (வெளிநாட்டு செலாவணி சட்டம்) 22ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளை வழங்கியுள்ளார்.*

*உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தற்போதைய அத்துடன் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளைக் கருத்தில் கொண்டும் சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களை மேலும் வசதிப்படுத்தும் நோக்குடனும் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் பரிந்துரையுடனும் அமைச்சரவையின் ஒப்புதலுடனும் நிதி அமைச்சர் வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளையை வழங்கியுள்ளார்.*

*இந்த கட்டளையானது மூலதனக் கொடுக்கல் - வாங்கல்களுக்கான வெளிமுகப் பண அனுப்பல்கள் மீதான சில வரையறைகளை தளர்த்தியுள்ளதுடன் புலம்பெயர்ந்தவர்களின் நடைமுறை மாற்றல்கள் மீதான மட்டுப்பாடுகளை அகற்றியுள்ள அதேவேளை முன்னைய கட்டளையின் கீழ் விதிக்கப்பட்டிருந்த வேறு இடைநிறுத்தல்கள் - வரையறைகள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.*

*புதிய கட்டளையானது 2023.06.28 தொடக்கம் ஆறு மாதங்களுக்கு வலுவிலிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.*

*இதுகுறித்த மேலதிக தகவல்களை www.dfe.lk என்ற வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் பார்வையிடமுடியும். (ஐ)*

# திருத்தம் செய்யப்பட்ட 175 பேருந்துகளை டிப்போக்களிடம் ஒப்படைக்க தீர்மானம்!



*கொழும்பு, ஜூலை 26*

*இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 175 பேருந்துகள் பழுது பார்க்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தலை பெற்றுக்கொண்டார்.*

*நாட்டின் இறக்குமதி கட்டுப்பாடுகளின் விளைவாக உதிரிப் பாகங்கள் இல்லாததால் இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.*

*இது தொடர்பான ஆவணங்களை போக்குவரத்து அமைச்சர் பந் துல குணவர்த்தன ஜனாதி பதியிடம் கையளித்தார்.*

*போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பணிப்புக்கு அமைய டிப்போ மட்டத்தில் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், பொது திறைசேரி ஒதுக்கீட்டின் மூலம் நிதி வழங்கப்பட்டது.*

*மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக சேவையில் ஈடுபடாத 852 பேருந்துகளில் 400 பேருந்துகளை சீரமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.*

*இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 175 பஸ்கள் கிட்டத்தட்ட 300 மில்லியன் ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளது.*

*இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் ஈடுபாட்டுடன் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இந்த 175 பேருந்துகளில் 15 பேருந்துகள் “சிசு சீரிய” திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு, பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்திற்காக வழங்கப்படும்.*

*மீதமுள்ளவை பயணிகள் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அந்தந்த டிப்போக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. (ஐ)*

## ஒருவரை தாக்குவதற்காக பணம் கொடுத்த பெண் கைது!

*கொழும்பு, ஜூலை 26*

*குடும்பத் தகராறு காரணமாக ஒருவரை பணம் கொடுத்து தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.*

*கொரியாவில் பணிபுரியும் ஒருவர், தனது மனைவி மூலம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயை வழங்கி ஒருவரை தாக்கியுள்ளார்.*

*களுத்துறையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தெபுவன, தொம்பதொட, யதவர பிரதேசங்களைச் சேர்ந்த 22, 25 மற்றும் 45 வயதுடையவர்களும், அயல் பிரதேசத்தில் வசிக்கும் கொரியாவிலிருந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்திய சந்தேக நபரின் மனைவியுமே கைது செய்யப்பட்டனர். (ஐ)*

## புகையிரதத் திணைக்களம் மீளக் கட்டமைக்கப்படவுள்ளது

*கொழும்பு, ஜூலை 26*

*இலங்கை புகையிரதத் திணைக்களம் மீள கட்டமைக்கப்படவுள்ளது. இதற்கான பொருத்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக விடயம் சார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடன் கூடிய குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

*அரசின் ஏ தரத்திலான திணைக்களமாக தரப்படுத்தப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்து மற்றும் பண்டங்கள் போக்குவரத்து ஆகிய இரண்டு சேவைகளையும் வழங்கும் புகையிரதத் திணைக்களத்தின் நிர்வாக, நிதி மற்றும் தொழில்பாட்டு ரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் பிரச்னைகள் மேலெழுந்துள்ளன.*

*இந்த பிரச்னைகளை குறைத்து சேவை வழங்கல்களை உயரிய மட்டத்தில் பேணி செல்வதற்காக புகையிரதத் திணைக்களத்தை மீள கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. (ஐ)*

# இந்தியாவிலிருந்து ஒருநாளைக்கு 10 இலட்சம் முட்டைகள் இறக்குமதி!

கொழும்பு, ஜுலை 26

**இந்தியாவிலிருந்து ஒருநாளைக்கு 10 இலட்சம் கோழி முட்டைகளை இறக்குமதி செய்ய முடியும். இவற்றை லங்கா சதொச மூலம் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள் குழு தமிழ்நாட்டிலுள்ள பண்ணைகளுக்குச் சென்று தரப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கியதாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

இதற்கான உத்தரவுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"இந்த வாரம் நாங்கள் ஏற்றுமதிகளைப் பெறத் தொடங்குவோம். ஒரு நாளைக்கு 10 இலட்சம் முட்டைகளை பெறுவதே எங்கள் திட்டம்," என்றார்.

முன்னதாக, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் தொழிற்சாலைகளின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்டன. இப்போது, அவற்றை சந்தைக்கு வெளியிட முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு கையிருப்பின் மாதிரி சோதனைக்குப் பிறகு கால்நடை சுகாதார அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற சில நாட்கள் ஆகும்,"

முட்டைகள் தலா ரூ. 35இற்கு விற்பனை செய்யப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# விலைகளை காட்சிப்படுத்தாத கடைகள் மீது கடும் நடவடிக்கை

## நுகர்வோர் விவகார அதிகார சபை

கொழும்பு, ஜுலை 26

நுகர்வோர் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தாத அனைத்து கடைகளுக்கும் எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

மொத்த விற்பனை கடைகள், சில்லறை கடைகள், உணவகங்கள் மற்றும் அனைத்து நுகர்வு பொருள் விற்பனை செய்யும் இடங்களிலும் விலைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

பொருட்களின் விலையைக் காட்சிபடுத்தாத கடைகளில் மக்கள் பொருட்களை வாங்க வேண்டாம். இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தாத கடைக் காரர்களுக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் - என்றும் அவர் மேலும் கூறினார்.

# பதுளையில் காட்டு தீ; 70 ஏக்கர் வனம் அழிவு

கொழும்பு, ஜுலை 26

கடுமையான வறட்சி, காற்றுடன் கூடிய வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் காட்டுத் தீ பரவி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. காட்டுத் தீயால் 70 ஏக்கருக்கும் அதிகமான பகுதி அழிவடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் அடையாளம் தெரியாத தரப்பினரால் கடந்த சில தினங்களில் காடுகளுக்கு தீ வைக்கப்பட்டதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், காட்டுத் தீ தொடர்பான தகவல்களை 117 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மகியங்கனை தம்பான மாவரகல வனப்பகுதியில் தொடர்ந்தும் காட்டுத்தீ பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரையில் 70 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி மக்களின் நன்மதிப்பை பெற்றதாக நான் நினைக்கவில்லை!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளதாக தாம் நினைக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் தமக்கு ஆதரவாக சிலர் உள்ளனர்.

"உணவு மற்றும் பானங்களைப் பெறுபவர்கள், சிறிது அந்நிய செலாவணி சம்பாதிக்கக் கூடியவர்கள் அல்லது மோசடியை நடத்தக்கூடியவர்கள் நாடு இப்போது ஸ்திரமாக இருப்பதாகவும் தற்போதைய ஜனாதிபதி நாட்டை சரியான திசையில் கொண்டு செல்கிறார் என்றும் நினைக்கிறார்கள்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், உண்மையில் அந்த விடயங்கள் நடக்காது என நாம் பார்க்கின்றோம். "எதிர்க்கட்சிகள் தகுதியற்ற ஒருவரை முன்னிறுத்தினால், தேர்தலில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். அது தேர்தலில் பரிந்துரைக்கப்படும் வேட்பாளரை பொறுத்தே அமையும்," எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ. நா. வதிவிட பிரதிநிதி ஜனாதிபதியை சந்தித்து பேச்சு!

கொழும்பு, ஜுலை 26

ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்ட்ரே பிரான்ஞ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பில், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி குறித்தும் நல்லிணக்கத்துக்கான திட்டங்கள் தொடர்பான யோசனைகளையும் ஜனாதிபதி இதன்போது முன்வைத்துள்ளார்.

இந்த சந்திப்பானது நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் மறுசீரமைப்புகளின் போதான நியாயமான படுகடன் பரிகாரத்தை உறுதி செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி குறித்து இதன்போது ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உலக வங்கியின் 20 கோடி டொலர் மானியத்தை பெறுவதற்கு அனுமதி!

கொழும்பு, ஜுலை 26

உலக வங்கியுடன் 20 கோடி அமெரிக்க டொலர்களை மானியமாக பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு சிறந்த இலக்கு வருமானம் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்கும் சமூக பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கியுடன் கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுகளை நடத்துவதற்கு மே மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் கடன் மானியத்தைப் பெறுவதற்காக உலக வங்கி குழுவின் சர்வதேச அபிவிருத்தி தீர்ப்பாயத்துடன் தொடர்புடைய உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# சிறுமியை காணவில்லை; மக்களின் உதவி கோரல்!



கொழும்பு, ஜுலை 26

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் சீதுவை பிரதேசத்தில் 17 வயதுடைய சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

சிறுமியின் படத்தை வெளி யிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனை தெரிவித்துள்ளது. காணாமல் போன சிறுமியின் தந்தை நீர்கொழும்பு பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

காயத்ரி தேவ்ஷானி சூரியசிங்க என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு காணாமல் போயுள் ளார்.

சிறுமியைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே சிறுமியை கண்டுபிடிக்க பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். காணாமல் போன சிறுமி பற்றி ஏதேனும் தகவல் தெரிந்தால் நீர்கொழும்பு பொலிஸாருக்கு அறிவிக்கும்படி பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# கிழக்கில் 700 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி!

திருகோணமலை, ஜுலை 26

கிழக்கு மாகாணத்தில் புதிதாக 700 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்வி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டைக் கருத்தில் 700 ஆசிரியர்களை பாடங்கள் சார்ந்து நியமனம் செய்ய ஆளுநருக்கு கல்வி அமைச்சர் அனுமதி வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சித்திரவேலாயுதர் ஆலயத்தின் திருவிழா ஏற்பாடு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது

திருக்கோவில், ஜுலை 26

திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய பிரதேசம் எதிர்வரும் ஓகஸ்ட் 16ஆம் திகதி வரை போதைப்பொருளற்ற வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி. கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருவிழா குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன. மக்களின் நலனுக்காக குடிதண்ணீர், போக்குவரத்து, மின்சாரம், சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளில் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாட்கள் நடைபெற்று ஆடி அமாவாசை தீர்த்த தினத்தன்று நிறைவடையும். (ஐ)

# செயற்கை நுண்ணறிவுக்கு சாத்தியப்படாத மனிதனின் தனித்துவமான நான்கு பண்புகள்

அகஸ்டின் ஜோயல் பெர்னாண்டஸ்

மனித இனத்தை மற்ற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும் காரணிகள் குறித்து பல நூறு ஆண்டுகளாக ஆய்வு செய்து கண்டறிய மனிதன் முயன்றான்.

இந்தத் தேடலின் பயனாக உயிரியல், சமூகவியல், மானுடவியல், தத்துவம், சட்டம் என்பன போன்ற கருத்தாக்கங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், தற்போது மனித குலத்துக்கே சவால்விடும் விதத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் வளர்ந்து வருகிறது.

நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகிய பூதங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது பூதம் என்று சொல்லப்படும் அளவுக்கு செயற்கை நுண்ணறிவு இன்று அசுர வளர்ச்சியடைந்து வருகிறது.

செயற்கை நுண்ணறிவுடன் கூடிய இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்த சோதனைகள் வெற்றி பெற்றுள்ளன. மனிதர்கள் செய்யும் பல பணிகளை செயற்கை நுண்ணறிவு மூலம் இயந்திரங்கள் கண் இமைக்காமல் செய்யத் தொடங்கியுள்ளன.

மனிதர்களின் படைப்பாற்றலே ரோபாக்கள் மற்றும் இயந்திரங்களின் உருவாக்கத்திற்கு அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது. மனிதனால் உருவாக்கப்படும் இந்த ரோபோக்களும், இயந்திரங்களும் அவனது அன்றாட வாழ்வில் செலுத்தப்போகும் ஆதிக்கத்தை 'Blade Runner' எனும் ஹாலிவுட் திரைப்படமும், அதில் வரும் 'ராய் பேட்டி' கதாபாத்திரமும் 40 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனத்துடன் கூறி உள்ளன.

அதேநேரம், உணர்வுகள் இல்லாத இயந்திரங்களை மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தும் விதமாக இந்தத் திரைப்படத்தில் காட்சிகள் சித்தரிக்கப்பட்டிருந்தன.

ஆனால், இனி சகலமும் செயற்கை நுண்ணறிவு என்று ஆகிப்போனால் மனிதனின் நிலை என்னவாகும்? மனிதன் செய்யும் அனைத்தையும் செயற்கை நுண்ணறிவால் செய்ய இயலுமா?

### மனிதனின் தன்னிச்சையான செயல்பாடு

செயற்கை நுண்ணறிவில் இருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று அவர்களது தன்னிச்சையான செயல்பாடு, அறிவு மற்றும் செயல் திறன்.

தமது தன்னிச்சையான செயல்பாடுகளால் அனைத்தையும் படைக்கும் அல்லது உருவாக்கும் திறன் மனிதர்களுக்கு உள்ளது. ஒருநாள் காலையில் விழித்தெழும் ஒரு மனிதர், ஒரு கவிதை அல்லது கதையைப் படைப்பது குறித்துச் சிந்திக்கலாம். ஆகச் சிறந்த படைப்பை உருவாக்குவது குறித்து கற்பனை செய்யலாம். வாழ்வின் தனது தனிப்பட்ட அனுபவங்களில் இருந்து அவர் புதிய கற்பிதங்களை, அனுபவங்களை இந்த உலகுக்கு அளிக்கலாம்.

மனிதர்களின் இதுபோன்ற தன்னிச்சையான செயல்பாடுகளை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் மேற்கொள்ள இயலாது.

அதேநேரம் சூழ்நிலைக்கேற்ப செயல்படும் நுட்பத்தை உருவாக்கும் நிலையை செயற்கை நுண்ணறிவு எதிர்காலத்தில் எட்டலாம். அப்போது அதன் செயல்பாடு மனிதர்களின் தன்னிச்சையான செயல்களை ஒத்திருக்கலாம்.

ஆனால், அது விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளப்படும் ஒரு செயலில் இருந்து முற்றிலும் மாறுப்பட்டதாகவே இருக்கும். அதாவது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும் மனிதர்களால் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதாகவே இருக்கிறது என்று 'நேச்சர்' இதழில் வெளியான ஒரு கட்டுரையில் குறிப்பிடுகின்றனர் ஜராகோசா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான மிகுவல் அகுலேரா மற்றும் மானுவல் பேடியா.

உலக அளவில் புகழ்பெற்ற ஜாஸ் இசையை அளிக்கும் குழுவை மேம்படுத்தப்படுத்த வேண்டுமென்றால், அதை மனிதரால் தான் செய்ய இயலுமே தவிர, செயற்கை நுண்ணறிவு நுட்பத்தால் மேற்கொள்ள முடியாது என்கின்றனர் அவர்கள்.

### நெறிமுறைகள், கோட்பாடுகள்


ஒரு மனிதர் சமூகத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கும், அவரது எதேச்சையான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் பல்வேறு சட்ட விதிமுறைகள், நெறிமுறைகள், மதக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அதோடு தான் என்னவெல்லாம் செய்யக்கூடாது என்ற தெளிவும் மனிதர்களுக்கு உள்ளது.



ஆனால் செயற்கை நுண்ணறிவுக்கோ, இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு செயல்படும் இயந்திரங்களுக்கோ மனிதரைப் போன்று எந்த நெறிமுறைகளும், கோட்பாடுகளும் இல்லை.

தங்களுக்குள் முன்பே புகுத்தப்பட்ட செயல்பாட்டு விதிமுறைகள், நிரல்கள் அல்லது கட்டளைகளின்படி மட்டுமே அவற்றால் செயல்பட முடியும். எனவே மனிதர்களால் கடைபிடிக்கப்படும் பல்வேறு நெறிமுறைகளை, செயற்கை நுண்ணறிவால் பின்பற்ற முடியாது என்பது தெளிவாகிறது.

நன்மை, தீமைகளை வேறுபடுத்தி அறியும் பகுத்தறிவாக நெறிமுறைகள் விளங்குகின்றன. ஆரம்ப நிலையில் இருக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதில் மனிதன் தனக்கு வகுக்கப்பட்டுள்ள நன்னெறிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது.




வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றும் மனிதர்களால், இயந்திரங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான நிரல்கள் வகுக்கப்படும்போது ஓர் இயந்திரம் நல்லது, கெட்டது என்றில்லாமல் பயனுள்ளதாக அமைகிறது.

ஆனாலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கான நெறிமுறைகளும் வரும் காலத்தில் வகுக்கப்படலாம் என்கிறார் இயற்பியலாளர் ஜோஸ் இக்னாசியோ லடோரே.

உலகளவில் இன்று பிரபலமாக உள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் செயல்படும் செயலியான ChatGPT, உணர்திறன் மிக்க உள்ளடக்கங்களை ஒளிபரப்பு செய்யாதபடியும், ஆழமான அணுகலுக்கு அனுமதி அளிக்காதபடியும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

முறையான நெறிமுறைகளைப் பின்பற்றும் மனிதர்களால்தான் இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் நெறிமுறைகள் காலப்போக்கில் மாறலாம். அப்போதும் இதற்கான நெறிமுறைகளின் அடிப்படையானது மனிதனுடன் தொடர்புடையதாகவே இருக்குமேயன்றி, தன்னிச்சையாக அமையாது.



### எண்ணம் மற்றும் செயல்

செயற்கை நுண்ணறிவில் இருந்து மனிதர்களை தனித்துவப்படுத்திக் காட்டும் மற்றொரு காரணி அவர்களது எண்ணங்கள்.

மனிதர்களின் எண்ணங்களை வெறும் ஆசைகள் அல்லது உள் உளவியல் நிலைகளாகக் குறைத்து மதிப்பிட முடியாது என்று எலிசபெத் அன்ஸ்காம்ப்.

எண்ணம் என்பது ஒரு செயலின் இன்றியமையாத பண்பு என்றும், அது தார்மீகப் பொறுப்புடன் உள்ளார்ந்த தொடர்புடையது எனவும் அன்ஸ்கோம்ப் விளக்குகிறார். எனவே ஒரு செயல் தார்மீகரீதியாக சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்கும்போது, அதிலிருந்து நோக்கத்தைப் பிரிக்க முடியாது என்கிறார் அவர்.



ஒரு செயலின் விளைவுகளில் மட்டுமே கவனம் செலுத்தும் நெறிமுறைக் கோட்பாடுகளை விமர்சிக்கிறார் எலிசபெத் அன்ஸ்காம்ப்.

நெறிமுறைகள் மற்றும் நீதி முறைமைகள் எதுவும் இல்லாததால் செயற்கை நுண்ணறிவுக்கு என்று தனிப்பட்ட எண்ணம் இல்லை. இந்த எண்ணம் அதன் செயற்பாட்டைத் தீர்மானிக்கும் புரோகிராமருடன் தொடர்புடையதாக உள்ளது.

செயற்கை நுண்ணறிவுக்கு வருத்தங்களோ, உளவியல் பிரச்னைகளோ இல்லை

மனிதனுக்கும், செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான வேறுபாடுகள் தெளிவாக உள்ளன. VI எனப்படும் செயற்கை நுண்ணறிவுக்கு எந்த அனுபவமும், வரலாறும் கிடையாது. அதேபோல் உளவியல்ரீதியான எந்தப் பிரச்னையும் அவற்றுக்கு இல்லை.

அத்துடன் மனித நெறிமுறைகள், அறநெறிகளின் அடிப்படை அம்சமாய், எதிர்மறையான ஒரு செயலுக்காக செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் வருந்துவதும் இல்லை. அவை நேசிக்கவோ, நேசிக்கப்படுவதோ இல்லை. அவை துன்பங்களையோ, வலிகளையோ உணர்வதில்லை. சுருங்கக் கூறினால் அவற்றுக்கென சொந்த கருத்து என்று எதுவும் இல்லை. ஏனெனில் எதுவுமே அவற்றுக்குச் சொந்தமானது இல்லை.



மனிதனுக்கு பயனுள்ளதாக இருந்தால் மட்டுமே ChatGPT நிலைத்திருக்கும். இல்லையெனில் அது காலாவதியாகி விடக்கூடும். ஏனெனில் அதற்கென தனி அடையாளம் எதுவும் இல்லை. ஆனால் மனிதனுக்கு அப்படி இல்லை. அவனுக்கென்று தனித்த அடையாளங்கள் உள்ளன.

VI எனப்படும் செயற்கை நுண்ணறிவு அழிவுகரமானதாகவும் இருக்கலாம். உலகெங்கும் உள்ள கோடிக்கணக்கான மனிதர்களின் வேலைகளுக்கும் உலை வைக்கக் கூடியதாகவும் இருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த தொழில்நுட்பத்தை ஆக்கபூர்வமானதாகவோ, அழிவுகரமானதாகவோ பயன்படுத்துவது மனிதர்களின் கையில்தான் உள்ளது.

ஆனால், எதிர்காலத்தில் அதன் இயல்பை யாராவது சந்தேகித்தால், மனிதரல்லாத ஒன்றைக் கையாளுகிறோம் என்பதை அனைவருக்கும் நினைவூட்டும் விதத்தில், ஐம்புலன்களில் ஒன்றான கண்ணைக் குறிக்கும் விதத்தில், கண் சிமிட்டும் பொறி ஒன்று அதனுள் பொருத்தப்படலாம்.

(இந்தக் கட்டுரையாளர் அர்ஜென்டினாவில் உள்ள கேபல் பலேர்மோ பல்கலைக்கழகத்தில் இதழியலில் பட்டமும், ஸ்பெயினின் சாண்டியாகோ டி கம்போஸ் டெலா பல்கலைக்கழகத்தில் தத்துவவியலில் முதுநிலை பட்டமும் பெற்றுள்ளார்)

# கட்டுப்பாட்டை இழப்பது குறித்து அரசாங்கத்தின் அச்சம்



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக அல்லது பகுதியாக நடைமுறைப் படுத்துவது குறித்து தீர்மானிக்க சகல அரசியல் கட்சிக ளினதும் கூட்டமொன்றை கூட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். இனப்பிரச்சி னைக்கு தீர்வைக் காணப்போவதாகவும் எதிர்காலச் சந்த திகளின் தோள்களில் இருந்து அந்தச் சுமையை எடுக்கப் போவதாகவும் பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கையோடு அவர் சூளுரைத்தார்.

தனது தீர்வுத்திட்டத்தின் ஒரு அங்கமாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண் டிய தேவை குறித்து அவர் குறிப்பிட்டார். பொலிஸ் அதிகாரத்தையும் காணி அதிகாரத்தையும் உள்ளடக்கிய தாக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது சட்டரீதியாக அவசியமாக இருந்தபோதிலும் அதற்கு முரணாக அரசாங்கங்கள் அதைச் செய்வதற்கு முன்வரா மல் இருந்தன.

தனது நிலைப்பாடு மீதான விமர்சனங்களுக்கு புத்தி ஜீவித்துவ தெளிவுடன் பதிலளித்த ஜனாதிபதி பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் ஏற்கெனவே அரசியல மைப்பின் ஒரு பகுதியாக இருக்கின்றன என்றும் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் இருக்கவேண்டுமானால் சட்ட ரீதியாக பாராளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவுடன் இல்லாதொழிக்கவேண்டியது அவசியமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பிறகு ஆறு மாதங்கள் கழித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் சிக்கலான பிரச்சினை யைக் கையாளப்போவதாக மீண்டும் சூளுரைத்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் உயர்மட்ட அரசியல் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்திப்ப தற்கு புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தை தொடர்ந்து இதை அவர் கூறினார்.

இலங்கையை பொருளாதார ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் நெருக்கமாக பிணைப்பதற்கு வழிவகுக்கும் பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுவிட்டு ஜனாதி பதி நாடு திரும்பியிருக்கிறார். இந்தியாவுடனான உறவுக ளைப் பலப்படுத்துவது இலங்கையின் தேசிய நலன்க ளுக்கு வாய்ப்பானது. வரலாற்று தெளிவின்மையும் அவ நம்பிக்கையும் இருக்கின்ற போதிலும் இதற்கு அறிவுபூர் வமான அணுகுமுறையும் புத்திஜீவித்துவ தெளிவும் தேவை. அது ஜனாதிபதியின் பலமாக இருக்கிறது. பரந் தளவில் மக்களுக்கு அதை விளங்கவைக்க வேண்டும்.

கடந்த கால பிரச்சினைகளைக் கையாளுவதிலும் சர்வதேச உறவுகளிலாக இருந்தாலென்ன அல்லது நீண் டகால உள்நாட்டு நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன் றைக் காண்பதில் சகல சமூகங்களினதும் ஐயங்களையுப் போக்கி நலன்களைப் பேணுவதிலும் ஜனாதிபதி கடுமை யான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக் கும்.

13 வது திருத்தத்தின் கீழான பொலிஸ் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான பிரச்சினை குறித்து மேலும் ஆராயவேண்டிய தேவை இருக்கிறது என்றும் அது தொடர்பில் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு பாராளுமன் றத்தில் உள்ள அரசாங்க, எதிர்க்கட்சி மற்றும் ஏனைய கட்சிகளையும் கலந்தாலோசிக்கப் போவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

சமூகங்கள் என்ற வகையில் மக்கள் மனங்களில் பரஸ் பரம் ஆழமான அவநம்பிக்கை இருக்கிறது. ஆனால், ஜேர்மனியாக இருந்தாலென்ன, ஐக்கிய இராச்சியம் மற் றும் சுவிட்சர்லாந்தாக இருந்தாலென்ன வெற்றிகரமான ஐரோப்பிய தேசங்களைப் போன்று புராதன நம்பிக்கை யீனங்களும் போர்கள் பற்றிய நினைவுகளும் அறிவுபூர் வமான சிந்தனைக்கு வழிவிடவேண்டிய நேரம் ஒன்று இருக்கிறது. சகலரதும் பரஸ்பர நலன்களில் அடிப்படை யில் ஒத்துழைக்க வேண்டியதும் அவசியமாகும்.

**நம்பிக்கையை கட்டியெழுப்புதல்**

அரசியல் தீர்வொன்றை காண்பது தொடர்பில் ஜனாதிபதியின் பிந்திய நல்லெண்ண வெளிப்பாடுகளை பிரதான போக்கு தமிழ் அபிப்பிராயத்தை பிரதிநிதித்து வம் செய்யும் தமிழ் தேசிய கூட்டமைப்பு சந்தேக உணர் வுடன் அதன் பிரதிபலிப்பை வெளிக்காட்டியிருக்கிறது.

சமத்துவமான குடிமக்களாக தாங்கள் நடத்தப்படக் கூடிய அரசியல் முறைமை ஒன்றை தங்களுக்கு வழங்கு வதற்கு தற்போதைய அரசாங்கத்திடமோ அல்லது வேறு எந்த அரசாங்கத்திடமுமோ இருக்கக்கூடிய விருப்ப மின்மை தொடர்பில் பரந்தளவில் தமிழ் மக்களின் உணர் வுகளைப் பிரதிபலிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப் பின் சந்தேகம் இருக்கிறது. இலங்கை அரசினால் தாங் கள் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்படுவதாக தமிழ் மக்கள் மத்தியில் வலுவான உணர்வு காணப்படுகி றது.

சிங்கள மொழியில் மாத்திரம் தாங்கள் பெறும் கடிதங்களிலும் தொடர்பாடல்களிலும் அரசாங்க அதி காரிகள் என்ற வகையில் பதவி உயர்வுகளின்போது தாங் கள் அலட்சியம் செய்யப்படுவதிலும் இதை அவர்கள் காண்கிறார்கள். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான காலகட்டத்தில் தங்கள் அனுபவத்தின் மூலமாக தமிழர் கள் கண்டுகொண்டது இதுவே.

தேசபிதா பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங் கத்தின் கீழ் சிறுபான்மைச் சமூகங்கள் தொடர்பில் முதன் முதலான தீர்மானம் தமிழர்களில் ஒரு பகுதியினரை குடி யுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது.

ஜனாதிபதி உத்தேசித்திருக் கின்றதன் பிரகாரம் தமிழ் கட்சிகளுடன் இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு முன்னதாக அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயன்முறை களை முன்னெடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. அந்த செயன்முறைகள் இலங்கை அரசு தமிழ் மக்களை உண் மையில் நம்புகிறது என்றும் அவர்களின் நலன்களில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் வெளிக்காட் டுவதாக இருக்கவேண்டும்.

மெய்யாகவே முற்றுமுழுதாக சிங்களவர்களைக் கொண்டதாக இருக்கும் இராணுவம் வடக்கிலும் கிழக் கிலும் குடிமக்கள் வாழ்வில் சம்பந்தப்படுவதை முழுமை யாக இல்லாவிட்டாலும் கடுமையான அளவுக்கு குறைப் பது தமிழ் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூ டிய முக்கியமான முதல் நடவடிக்கையாக அமையும். இது விடயத்தில் பெரிய அயல்நாடான இந்தியாவிடமி ருந்து இலங்கை பெற்றுக்கொள்வதற்கு பாடம் ஒன்று இருக்கிறது.

சீக்கிய பிரிவினைவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு பஞ்சாபில் உள்ள சீக்கியர்களின் புனித தலமான பொற் கோவிலுக்குள் சீக்கியப் படையணியை அனுப்புவதற்கு அன்றைய இந்திய அரசாங்கம் தீர்மானித்தது. இந்தியா அதன் சகல சமூகங்களையும் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட பெரிய இராணுவத்தைக் கொண் டிருக்கிறது. சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அந்த இரா ணுவத்தின் தலைமைப் பதவிகளில் அவர்களின் சனத் தொகையின் விகிதாசாரத்தை மீறிய அளவில் கூடுதல் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்தும் சோதனைச்சாவடிகளில் கடமையில் இருக்கும் சிங்களப் படைவீரர்கள் வாகனங்களை நிறுத்தி அவற்றில் இருந்து பொதிகளை இறக்கிப் பயணிகளை நிர்ப்பந்தித்து சோத னையிடுகிறார்கள்.

புவியியல் அடிப்படையில் நோக்காமல் உண்மை யாகவே தேசிய ஐக்கிய உணர்வு இருக்குமானால், போர் முடிவுக்கு வந்து பதினான்கு வருடங்களுக்கும் அதிக மான காலம் கடந்துவிட்ட நிலையில் வடக்கு, கிழக்கை நாட்டின் ஏனைய பகுதிகளை விடவும் வேறுபட்ட முறை யில் நடத்தக்கூடாது.

தொல்லியல் ஆய்வு என்ற அடிப்படையில் நிலங்கள் கையப்படுத்தப்படுவது வடக்கு, கிழக்கில் தற்போது இன்னொரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. அந்த பகுதிகளிலும் கூட பௌத்தமதம் பின்பற்றப்பட்டு வந்த புராதன காலத்தின் தொல்லியல் சின்னங்கள் இருக்கின் றன என்ற அடிப்படையில் இந்த ஆய்வுகள் முன்னெடுக் கப்படுகின்றன.

இது அந்த புராதன சின்னங்கள் கண்டுபிடிக்கப்ப டும் இடங்களில் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கு அரச அதிகாரிகளையும் பௌத்த மதகுரு மாரையும் தூண்டுகிறது. அந்த புராதன சின்னங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கே அவற்றைச் சூழவுள்ள நிலங்கள் சொந்தமாக இருந்தன என்று உரிமைகோரப்ப டுகிறது.

இது விடயத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்க சரியான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார். பௌத்த பின்ன ணியைக் கொண்டவையாக இருந்தாலென்ன இல்லா விட்டாலென்ன புராதன தொல்லியல் தலங்கள் குறிப் பிட்ட ஒரு இனத்துக்கு அல்ல முழுநாட்டுக்குமே சொந்த மான மரபுரிமைகளாகும்.

**பல்வகைமைக்கு அஞ்சுதல்**

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு பாராளு மன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் அழைக்கப்போவ தாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். இது ஒரு தீர்மானத்தை எடுப்பதை தாமதிப்பதற்கும் இறுதியில் கருத்தொருமிப் பைப் பெறமுடியவில்லை என்று காரணத்தைக் கூறி தீர் மானம் ஒன்றை எடுப்பதை தவிர்ப்பதற்குமான ஒரு வழி யாக இருக்கலாம் என்று தமிழ்க்கட்சிகள் IAறவைக் கொண்டுள்ளன. இது பழைய நிலைமக்கே நாட்டைக் கொண்டுசெல்லும்.

பல சட்டங்கள் முதலில் எதிரணி கட்சிகளின் ஆட்சேபத்துக்குரியவையாக இருந்ததுடன் குறைபாடுக ளைக் கொண்டவை என்று நீதிமன்றங்களினால் சுட்டிக் காட்டப்பட்டபோதிலும், இறுதியில் அவற்றை வாக்கெ டுப்புக்கு விடாமலே பாராளுமன்றத்தில் நிறைவேற்றக்கூ டியதாக இருந்திருக்கிறது. இது மனம் இருந்தால் இடம் உண்டு என்பதைக் காட்டுகிறது. அதேபோன்றே 13 வது திருத்தம் தொடர்பில் இணக்கப்பாடொன்றைக் காண்ப தற்கு குறுக்கே நிற்கக்கூடிய இடையூறுகளையும் வெற்றி கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையை கொடுக்கிறது.

ஆனால், 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு 40 வருடங் கள் கடந்துவிட்டதை நினைவுகூருவதற்கு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களைக் கலைக்க கலகம் அடக்கும் பொலிசார் மேற்கொண்ட மன்னிக்கமுடியாத வன்முறைத் தாக்குதலினால் தமிழர் களின் நம்பிக்கையை மீளப்பெறுவதில் உள்ள சவால் மேலும் கடுமையடையப் போகிறது.

சிவில் சமூகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் முன் னின்று தீபங்களை ஏற்றி அமைதிவழியில் அனுஷ்டித்த நினைவுகூரலை வன்முறை மூலம் பொலிசார் குழப்பிய டித்த செயல் மக்கள் போராட்டங்கள் அல்லது அரசாங் கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத நினைவுகூரல் நிகழ்வுகள் என்று வரும்போது அரசாங்கம் எந்தளவுக்கு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும் என்பதற்கான சமிக் ஞையாகும்.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டி லான நினைவுகூரல் நிகழ்வு வீதிகளில் குழப்பியடிக்கப் பட்ட அதே தினம் குளிரூட்டப்பட்ட மண்டபம் ஒன் றில் இடம்பெற்ற நினைவுகூரல் நிகழ்வில் அரசாங்க அமைச்சர்கள் பங்கேற்றார்கள் என்பதும் அதற்கு அரச ஊடகத்தின் அனுசரணை கிடைத்தது என்பதும் கவனிக் கத்தக்கது.

1983 ஜூலை 23 வாரத்தின்போது அரசாங்கத்திற் குள் இருந்த பிரிவினரின் உடந்தையுடன் பிரதானமாக தலைநகர் கொழும்பிலும் நாட்டின் பல்வேறு பாகங்களி லும் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் கட்டவிழ்த் துவிடப்பட்டன.

உயிரிழப்புகளும் சொத்து அழிவுகளும் வெட்கக் கேடானதும் வேதனைக்குரியதுமான ஒரு காலப்பகு தியை குறித்து நின்றது. அன்றிலிருந்து அது நாட்டை அச்சுறுத்திக்கொண்டேயிருக்கிறது.

இன, மத சிறுபான்மை இனங்கள் நாட்டில் பாது காப்பாகவும் பத்திரமாகவும் இருக்கமுடியும் என்பதை யும் அவர்கள் மதிக்கப்படுவார்கள் என்பதையும் உறுதி செய்வதற்கு இலங்கை அரசு இதுகாலவரையில் தவறியி ருக்கிறது.

சில பகுதிகளில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான கலவரங்கள் இடம்பெற்று. வந்திருக்கின்றன. கலகக்கார கும்பல்களை தடுத்துநிறுத்த பாதுகாப்பு படைகளினால் இயலவில்லை. மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பொலிஸ் படையின் நடத்தை மாகாணசபை களின் கீழ் பொலிஸ் அதிகாரங்கள் வந்தால் அவை துஷ் பிரயோகம் செய்யப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்ற அச்சத்தை பொய்யாக்குகிறது.

பல இனங்களைக் கொண்ட பன்முக சமூகம் ஒன் றில், கடந்த கால அட்டூழியங்களை நினைவுகூருவதாக இருந்தாலென்ன, பொதுவான ஒரு எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளாக இருந்தாலென்ன "இலட்சக்கணக்கான மலர்கள் மலரட்டும்" என்பதே தாரகமந்திரமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

# ஊர்காவற்துறை - காரைநகர் பாதையின் பணியாளர் மதுபோதையில் அடாவடி!

காரைநகர், ஜூலை 26

ஊர்காவற்துறை - காரைநகர் இடையேயான பயணிகள் கடற்போக்குவரத்து பாதையில் பணியிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர் ஒருவர் மதுபோதையில் அட்டகாசத்தில் ஈடுபட்டு பயணிகள் மீது தடியடி நடத்தியுள்ளார்.

ரௌடித்தனத்தில் ஈடுபட்ட பணியாளர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்.

ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகர் நோக்கி நேற்று மாலை 4.30 மணிக்கு புறப்பட்ட பயணிகள் போக்குவரத்து கடல் பாதையில் இந்த சம்பவம் நடந்தது.

இந்த போக்குவரத்து பாதையை வீதிஅபிவிருத்தி அதிகாரசபை பராமரித்து வருகிறது. கடற்பாதை போக்குவரத்தின் போது, வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் 3 பணியாளர்கள் கடமையிலிருக்க வேண்டும். எனினும், நேற்று இரு பணியாளர்களே கடமையிலிருந்தனர். அவர்களில் ஒருவர் மதுபோதையில் இருந்தார்.

மாலை நேரமென்பதால் பயணிகள் அதிகமாக இருந்தனர். ஊர்காவற்துறையிலுள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் அதிகமாக பயணித்தனர்.

இதன்போது, சுமார் 50 பயணிகளுடன் பாதை புறப்பட்டது. பாதையில் கடைசியாக ஏறிய சுமார் 75 வயது மதிக்கத்தக்க முதியவரை, மதுபோதையிலிருந்த பணியாளர் ஒருவர் அநாகரிகமாகவும், ஒருமையிலும் பேசியுள்ளார்.

இதனால் அங்கு சர்ச்சையான நிலைமை உருவானது.

இதையடுத்து, பயணத்தில் ஈடுபட்டவர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணியாளரை விலக்கி விட்டுள்ளனர்.

இந்நிலையில் முன்புறம் சென்ற அவர் கடற்பாதை அமைப்பிலிருந்த சட்டகம் ஒன்றை முறித்து எடுத்து, தனது சேர்ட்டையும் கழற்றி எறிந்து விட்டு பயணிகளை தாக்க முயற்சித்தார்.

அவரின் இந்த செயலை சுயாதீன ஊடகவியலாளர் என். பொன்ராசா தனது கைபேசியில் படம் பிடித்துள்ளார். இதை அவதானித்த போதையிலிருந்தவர் திடீரென கூட்டத்துக்குள் புகுந்து, பொன்ராசாவை தாக்கினார். இதில், அவரின் கைபேசி பலத்த சேதமடைந்ததுடன், ஹெல்மெட்டின் மீது அடி விழுந்தது. ஹெல்மெட் அணிந்திருந்ததால் அவரின் தலையில் காயம்படாது தப்பினார்.

இதற்குள், கடற்பாதை காரைநகர் கரையை நெருங்கியது.

போதை பணியாளரின் செயலை அடுத்து பாதையில் பயணித்தவர்கள் அவரை மடக்கிப்பிடித்தனர். சம்பவத்தை அறிந்து கடற்படையினரும் அங்கு வந்தனர். ஊர்காவற்றுறை பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் அங்கு வந்த சமயத்தில், பொதுமக்களின் பிடியிலிருந்து தப்பியோடிய பணியாளர் பனை வளவுக்குள் புகுந்து தனக்கு தானே காயத்தை ஏற்படுத்த முயன்றுள்ளார்.

எனினும், பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டவர், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளர். இன்றைய தினம் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, இந்த கடற்பாதை பயணத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கண்காணிப்பதில்லை என்றும் பணியாளர்கள் மதுபோதையில் கடமையில் ஈடுபடுவது அடிக்கடி நிகழும் சம்பவமென்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## ரூபாயின் மதிப்பு மேலும் சரிந்தது!

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை முந்தைய நாட்களுடன் ஒப்பிடுகையில் நேற்று அதிகரித்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின்படி ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 323.03 ரூபாயாகவும், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 336.16 ரூபயாகவும் பதிவாகியுள்ளது. (ஐ)

# வணிக கப்பல்துறை சேவை தற்காலிகமாக நிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 26

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை பொதுச் சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக வணிகக் கப்பல் துறை செயலகம் அறிவித்துள்ளது.

தற்போது கொள்ளுப்பிட்டி அனகாரிக தர்மபால மாவத்தையில் தற்காலிகமாக செயற்பட்டு வரும் அலுவலகம் மருதானையிலுள்ள புதிய கட்டட வளாகத்துக்கு மாற்றப்படுவதன் காரணமாகவே பொதுச் சேவைகள் இடைநிறுத்தப்படவுள்ளதாக செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், உள்ளூர் சேவைகளை ஒன்லைன் ஊடாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதற்காக, 070 1107788 என்ற வட்ஸ் அப் எண்ணுக்கு தகவல் அனுப்புவதன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வணிகக் கப்பல் துறை செயலகம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமாகும். (ஐ)

## அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிராக பல்கலை. மாணவர்கள் போராட்டம்!



கொழும்பு, ஜூலை 26

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்துள்ள யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழகங்கள் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அரச பல்கலைக்கழக ஒழுங்குமுறை அமைப்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இரத்து செய்து, புதிய கட்டமைப்பை ஆரம்பிக்குமாறு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

நாவல திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், உடனடியாக இந்த யோசனையை மீளப் பெறுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனிடையே, ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் அமைச்சரின் இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். (ஐ)






# குருந்தூர்மலை சிவன் ஆலயத்தை பாதுகாக்க சகலரும் முன்வாருங்கள்

## தென்கயிலை ஆதின குரு முதல்வர் அழைப்பு

திருகோணமலை, ஜூலை 26

**குருந்தூர் மலை ஆதி சிவன் கோவிலின் தொன்மம் - வழிபாட்டுரிமையை பாதுகாக்க அனைவரும் முன்வாருங்கள் என்று திருகோணமலை தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.**

**அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் அப்படியே வருமாறு,**

அண்மைகாலமாக ஆதிசிவன் திருக்கோவில்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சைவத் தமிழ் தொன்மங்கள் பௌத்த - சிங்கள தொன்மங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருவது வடக்கு - கிழக்கில் தொடர்கதையாக உள்ளது.

இந்தவகையில் முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதி சிவன் திருக்கோவில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு, சிவ வழிபாட்டு தொன்மங்கள் அகற்றப்பட்டு பௌத்த விகாரை நீதிமன்ற கட்டளையை புறந்தள்ளி அமைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

கடந்த வாரங்களில், ஆதி சிவன் கோவில் வளாகத்தில் சைவ வழிபாட்டுக்கு நீதிமன்ற கட்டளையையும் மீறி தடை ஏற்படுத்தப்பட்டுள்ள அதேநேரம் இந்த வாரம் சட்டவிரோத கட்டுமான இடத்தில் புத்தருடைய சொரூபம் வைக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது. இது இந்த நாட்டின் நீதிமன்ற சுயாதிபத்தை மீண்டும் மீண்டும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எமது சைவ ஆதீனங்களின் அருள் வழிகாட்டிலில் இயங்கும் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் உண்மையான சைவ சமய அமைப்புகள் மேற்படி மோசமான சைவத்தமிழர்களின் தொன்மங்களை மாற்றியமைக்கும் வழிபாட்டுரிமையை மறுதலிக்கும் செயல்பாடுகளை தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளன.

இந்நிலையில் அரச கட்டமைப்புகள் நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றுவதை - மதிப்பதை நாட்டின் அரச தலைவரான ஜனாதிபதி உறுதிப்படுத்த வேண்டும். இதேபோன்று தொல்லியல் திணைக்கள விவகாரங்களில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இதேநேரம் நாட்டின் நீடித்த நிலையான சமாதானத்திலும் அபிவிருத்தியிலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதிலும் பெரும் பங்காற்றும் இந்திய பேரரசு இந்த விவகாரங்களில் தமிழ் மக்களுக்கு குறிப்பாக எமது ஆதிசிவ மரபுரிமைகளை வழிபாட்டுரிமையை பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

முற்றிலும் ஆக்கிரமிப்பு மனநிலையில், பல ஆயிரம் வருடங்களாக சைவத்தமிழ் மக்கள் வசிக்கும் வழிபாடுகளை மேற்கொள்ளும் கடந்த நூற்றாண்டுகளில் சுயாதீன அகழ்வாராய்ச்சி நிபுணர்களால் ஆவுடையார், நந்தி அகழ்ந்து எடுத்து உறுதிப்படுத்தப்பட்ட பண்டைய தமிழ் இராசதானியும் பிரமாண்ட சிவாலயமும் அமைந்திருந்த வன்னி சிவப்பிராந்தியத்தின் முல்லைத்தீவையும் திருகோணமலையையும் இணைக்கும் குருந்தூர்மலையில் ஏற்படுத்தப்பட்டு வரும் அமைதியின்மை மத நல்லிணக்கத்தை ஆழமாக பாதித்து இன விரிசலை மேலும் கூர்மைப்படுத்தும் என்பதை துணைபோகும் அனைவரும் மனங் கொள்ள வேண்டும்.

வன்னி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் இந்த விவகாரத்தில் காத்திரமாக தொடர்ச்சியான பயனுறுதி வாய்ந்ததாக அமைய வேண்டும். அனைத்து தரப்பினரும் இணைந்து சுமுகமாக ஆக்கிரமிப்பு மனநிலையை கைவிட்டு தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்பில் வழிபாட்டுரிமைகளை மதித்து, தொன்மங்களை மாற்றியமைக்கும் செயல்பாடுகளை நிறுத்துவதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி பயணிக்க முடியும் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)



# சிறுதொழில் முயற்சியாளர்க்கு 50 இலட்சம் ரூபாய் கடனளிப்பு

காரைதீவு, ஜூலை 26

திருக்கோவில் பிரதேசத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார கடனாக 50 இலட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தம்பிலுவில் சமுர்த்தி வங்கியின் வாடிக்கையாளர்களில் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார கடன் வழங்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் எஸ். சதீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் பங்கேற்றார். இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மொத்தமாக 50 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. (ஐ)

# பெண் குளிப்பதை படம்பிடித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

அக்கரைப்பற்று, ஜூலை 26

வீடு ஒன்றுக்குள் நுழைந்து குளியல் அறையில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணை கைபேசியில் படம் பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டுக் காவலர் என்று தெரிய வருகின்றது.

பாதிக்கப்பட்ட பெண் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அம்பாறை மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் எம். பியின் பாதுகாப்பு பணியிலுள்ள அந்த பொலிஸ் உத்தியோகத்தர், அந்த வீட்டின் அருகிலுள்ள வீட்டுக்குள் நுழைந்தே இந்தச் செயலை செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபரின் கைபேசியை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தென்எருவில்பற்று பிரதேசத்தில் தொழில்சந்தை நடைபெற்றது!



காரைதீவு, ஜூலை 26

மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்துடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த தொழில் சந்தை மற்றும் தொழில் பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வில் அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் ஆகிய முப்பதிற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனங்களின் சேவைகள் பற்றி பங்கேற்றிருந்த இளைஞர், யுவதிகளுக்கு தெளிவுபடுத்தியதுடன் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

பிரதேச செயலக மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர்களான திரு க. ரவீந்திரன் மற்றும் தெ. ராகவன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு த. நிர்மல்ராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் 400ற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர். (ஐ)

# கணக்காய்வு திணைக்களத்தின் செயல்பாடு திருப்தி தரவில்லை!

## இம்ரான் மஹ்ரூப் எம். பி.

கொழும்பு, ஜூலை 26

கிழக்கு மாகாணத்தில் கணக்காய்வு திணைக்களத்தின் செயல்பாடுகள் குறித்து திருப்தியடைய முடியாதுள்ளது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

வெளி மாகாணங்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வியியல் கல்லூரி ஆசிரியர் குழுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு மேலதிக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் எனக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டிருக் கின்றார்கள்.

இந்தத் தகவலை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல விஞ்ஞானப் பாடத்துக்கு 30 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் 52 தமிழ் மொழி மூல விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளதைப் போல 30 விஞ்ஞான ஆசிரியர்கள் மேலதிகம் என்றால் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்ன செய்கின்றார்கள் என்ற கேள்வி உள்ளது. இதனைத் தவிர திருகோணமலை மாவட்டத்தில் 52 வெற்றிடம் இருக்கின்றதென்றால் இந்த 52 பேரும் வேறு எங்கோ பொறுப்புகள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்றுதானே அர்த்தம்.

கிழக்கு மாகாணத்தில் மத்திய கணக்காய்வு உத்தியோகத்தர்கள். மாகாண கணக்காய்வு உத்தியோகத்தர்கள் என இரு வகுதியினர் உள்ள போதிலும் இது போன்ற விடயங்களை இவர்கள் ஏன் கண்டு கொள்ளவில்லை.

இவர்கள் இவை தொடர்பாக பரிசீலனை செய்து உரிய காலத்தில் தேவையான அறிக்கைகளை தேவையான இடங்களுக்கு இட்டிருந்தால் மாகாணத்தில் 30 பேர் மேலதிகமாக இருந்தும் திருகோணமலை மாவட்டத்தில் 52 வெற்றிடம் இருக்க வாய்ப்பில்லை. இது போலவே ஏனைய பாடங்களுக்கான நிலையும் உள்ளது.

மேலதிக ஆளணியினரை வைத்திருப்போர் அவை தொடர்பான நட்டங்களை பொறுப்பேற்க வேண்டும் என்று ஏற்பாடுகள் உள்ள போதிலும் கிழக்கு மாகாண கணக்காய்வு திணைக்கள அதிகாரிகளின் பலவீனம் காரணமாக நீண்ட காலமாக ஆசிரியர் வளம் வீணடிக்கப்பட்டு வருகின்றது. சில பகுதிகளில் பற்றாக்குறையும் சில பகுதிகளில் மேலதிக மனித வளங்களும் என்ற நிலை உருவாகியுள்ளது.

கணக்காய்வு அதிகாரிகள் சரியாக செயல்பட்டிருந்தால் உண்மையில் கிழக்கில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளார்களா என்ற தெளிவும் ஏற்பட்டிருக்கும். திருகோணமலை மாவட்ட ஆசிரியர்கள் திருகோணமலைக்கு நியமிக்கப்பட்டிருக்க வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும் - என்றார். (ஐ)



## 216 ஆயிரம் கோடி ரூபாய்க்கு போர் விமானம் வாங்கும் ஆஸி.

சிட்னி, ஜுலை 26

அமெரிக்காவிடம் இருந்து 2 இலட்சத்து 16 ஆயிரம் கோடி (இலங்கை) ரூபாய் போர் விமானங்களை அவுஸ்திரேலியா வாங்கவுள்ளது.

அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டுப் போர் பயிற்சியை நடத்தி வருகின்றன. இந்த ஆண்டு 30 ஆயிரம் இராணுவத்தினர் இந்தப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

இந்தநிலையில் அமெரிக்காவிடம் இருந்து சுமார் ரூ. 2 இலட்சத்து 16 ஆயிரம் கோடி மதிப்பிலான 20 புதிய சி-30 ஹெர்குலஸ் விமானங்களை அவுஸ்திரேலியா வாங்குவதாக அறிவித்துள்ளது.

4 என்ஜின்கள் கொண்ட இந்த முதல் ஹெர்குலஸ் விமானம் வருகிற 2027ஆம் ஆண்டில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், அவுஸ்திரேலிய கடற்படை மற்றும் விமானப் படைக்கான திறன், இயக்கம் போன்றவற்றில் பெரிய முன்னேற்றம் ஏற்படும் என அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

## உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்ய படைகள் கடும் தாக்குதல்!

### மொஸ்கோ தாக்குதலுக்கு பழிவாங்கல்

கீவ், ஜுலை 26

கிரீமியா, மொஸ்கோ பகுதிகளில் உக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக, அந்த நாட்டின் தலைநகர் கீவ் மற்றும் முக்கிய நகர்களில் ரஷ்யா ஏவுகணை மற்றும் வான் தாக்குதல்களை நேற்று நடத்தியது.

உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர் நீடித்து கொண்டிருக்கிறது. இதில், உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது ரஷ்ய படைகள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

உக்ரைன் இராணுவம் பதிலடி தாக்குதல் நடத்துகிறது. சமீபத்தில் ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள கிரீமியாவில் பாலம் மற்றும் ஆயுத கிடங்கு மீது ஆளில்லா விமானங்கள் தாக்குதல் நடத்தப்பட்டன.

இதேபோல் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ட்ரோன் தாக்குதலை உக்ரைன் நடத்தியது. இதனிடையே ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,



கிரீமியா, மொஸ்கோ நகரம் மீது நடந்த உக்ரைனின் ஆளில்லா விமானம் தாக்குதலை சர்வதேச அமைப்புகள் கண்டிக்க வேண்டும். உக்ரைனின் செயல்கள் பதற்றங்களை அதிகரிக்க செய்யும். இந்த சூழ்நிலையை மேற்கத்திய நாடுகள் தூண்டி விடுகின்றன.

இதனால் கடுமையான பதிலடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை எங்கள் தரப்புக்கு உள்ளது என்று தெரிவித்தது.

உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று அதிகாலை ரஷ்ய படைகள் வான்வழித் தாக்குதலை நடத்தியது. கீவின் புறநகர் பகுதிகளில் ஏவுகணை மற்றும் வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

## கிரீஸில் தொடரும் காட்டு தீ பரவல் மேலும் 2,500 பேர் வெளியேற்றம்!

எதென்ஸ், ஜுலை 26

கிரீஸ் நாட்டில் பரவி வரும் காட்டுத்தீயால் 2,500 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப் பட்டுள்ளனர்.

கிரீஸின் சுற்றுலாவாசிகள் அதிகம் விரும்பக்கூடிய ரோட்ஸ் தீவின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பெரியளவில் காட்டுத் தீ பரவியது. இதனை தொடர்ந்து, இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்புக்காக முன்பே தப்பி வெளியேறி விட்டனர் என சி.என்.என். ஊடகம் தெரிவித்துள்ளது.

கிரீஸ் நாட்டில் இதுவரை இல்லாத வகையில் ஏற்பட்ட பெரிய காட்டுத்தீ இது என நிபுணர்கள் கணித்துள்ளனர். வெப்ப அலையால் காட்டுத்தீ பரவியுள்ளது. இதனால், பல இடங்களில் தீ பரவி பாதிப்பு ஏற்படுத்தியது. இதனை அடுத்து அரசாங்கம் மீட்பு பணியை துரிதப்படுத்தியுள்ளது.



இதன் தொடர்ச்சியாக, சுற்றுலாவாசிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் என 16 ஆயிரம் பேரை நிலப்பகுதி வழியாகவும், 3 ஆயிரம் பேரை கடல் பகுதி வழியாகவும் அழைத்து சென்றுள்ளது. கடந்த வார இறுதிக்குள் 30 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

## மகனின் இறுதி சடங்கில் தந்தை துப்பாக்கி சூடு!

### 9 சிறார் உட்பட 13 பேர் பலி

கின்சாகா, ஜுலை 26

மகனின் இறுதிச் சடங்கு நிகழ்வில் தந்தை நடத்திய துப்பாக்கி சூட்டால் 9 சிறார் உட் பட 13 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். கொங்கோ நாட்டில் நைய கோவா என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகுவா என்ற கடற்படை சிப்பாயின் மகன் திடீரென இறந்து விட்டார். அவரின் இறுதி சடங்கில் ஏராளமான உறவினர்கள் மற்றும் நண்பர் கள் கலந்து கொண்டனர்.

அப்போது திடீரென ஆவேசமடைந்த முகுவா தான் வைத்திருந்த துப்பாக்கியால் மகன் இறுதி சடங்கில் பங்கேற்றவர்களை சரமாரியாக சுட் டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் உயிருக்கு பயந்து நாலா புறமும் சிதறி ஓடினர். இந்த துப்பாக்கி சூட்டில் 9 சிறுவர்கள் உள்பட 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர் எதற்காக இவ்வாறு செய்தார் என்பது தெரியவரவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கைபேசி மூலம் பற்றிய தீயால் எரிபொருள் தாங்கி வெடித்தது

### 3 சிறுவர்கள் உட்பட 20 பேர் பலி!



நைகர், ஜுலை 26

கைபேசி மூலம் பற்றிய தீயால் எண்ணெய் தாங்கி வாகனம் வெடித்து சிதறிய தில் நைஜீரியாவில் 3 சிறுவர்கள் உட்பட 20 பேர் பலியாகினர்.

நைஜீரியாவின் ஒன்டோ மாகாணத்தின் ஒடிக்போ உள்ளூர் அரசாங்க பகுதியான ஓரேயில் எண்ணெய் தாங்கி வாகனம் வெடித்ததில் மூன்று சிறுவர்கள் மற்றும் ஒரு கர்ப்பவதி பெண் உட்பட 20 பேர் இறந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கியிலிருந்து எரிபொருளை எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நபர்களில் ஒருவர் வைத்திருந்த கைபேசி தீப்பற்றியதால் இந்த வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. லாகோஸ் - பெனின் விரைவுச்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றது. (ஐ)

## ருவிற்றரின் அடையாள சின்னமான நீல குருவிக்கு பதில் 'X' குறி அறிமுகம்!




வாஷிங்டன், ஜுலை 26

ருவிற்றரை மீள் மதிப்புக்கு உட்படுத்தும் வகையில் எலான் மஸ்க் அதன் அடையாள சின்னத்தை "ஓ" என மாற்றுவதாக அறிவித்துள்ளார்.

எலான் மஸ்க் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ருவிற்றர் நிறுவனத்தை வாங்கினார்.

அந்தநிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பொறுப்பேற்ற அவர், பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார்.

குறிப்பாக ஊழியர்களின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தார். பயனாளர்கள் தங்கள் ருவிற்றர் கணக்குகளை அதிகாரபூர்வமானதாக மாற்றுவதற்குக் கட்டணம் உட்பட புதிய மாற்றங்களை கொண்டு வந்தார். வருவாயை பெருக்கும் நடவடிக்கையாக இந்த முடிவை எடுத்ததாக எலான் மஸ்க் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில், அடுத்த அதிரடியாக ருவிற்றரின் நீல நிற குருவி அடையாள சின்னத்தை மாற்ற இருப்பதாகக் கூறியிருந்தார். இந்த அறிவிப்பை வெளியிட்ட சில மணி நேரங்களிலேயே புதிய அடையாள சின்னம் வெளியாகியுள்ளது. டுவிட்டரை மீள்மதிப்பு செய்யும் வகையில் எலான் மஸ்க் அதன் அடையாள சின்னத்தை "ஓ" என மாற்றுவதாக அறிவித்துள்ளார்.

இதன் மூலம் ருவிற்றரின் தனித்துவமான அடையாள சின்னமான நீல குருவிக்கு விடை கொடுக்கப்படவுள்ளது.

# இந்தியா - மேற்கிந்தியா டெஸ்ட் மழையால் சமநிலையில் முடிவு!




போர்ட் ஒவ் ஸ்பெய்ன், ஜூலை 26

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டி வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்ததால் இரண்டு அணிகளுக்கும் ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடருக்காக தலா 4 புள்ளிகள் வழங்கப்பட்டன.

எவ்வாறாயினும் முதலாவது டெஸ்ட் போட்டியில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 141 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்த இந்தியா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

போட்டியின் 3ஆம், 4ஆம் நாள் ஆட்டங்களும் சீரற்ற காலநிலை காரணமாக அவ்வப்போது ஆட்டம் தடைப்பட்டது. கடைசி நாளான திங்கட்கிழமை தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்படுவதாக மேற்கிந்தியத் தீவுகளின் நேரப்படி பிற்பகல் 2.50 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலையிலிருந்து மழை பெய்து கொண்டிருந்ததால் மதிய போசனத்துக்குப் பின்னரும் கூட இரண்டு அணியினரும் மைதானத்துக்கு சென்றிருக்கவில்லை.

பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை சற்று ஓய்ந்த போதிலும் 2 மணியளவில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்ததால் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இந்தப் போட்டியில் 365 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு 4ஆம் நாள் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அன்றைய ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணித் தலைவர் க்ரெய்க் பிராத்வெய்ட் (28), கேர்க் மெக்கென்ஸி (0) ஆகிய இருவரே ஆட்டம் இழந்தனர்.

டேஜ்நரேன் சந்தர்போல் 24 ஓட்டங்களுடனும் ஜேர்மெய்ன் ப்ளக்வூட் 20 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

கடைசி நாளன்று தொடர்ச்சியாக மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டு வெற்றி - தோல்வியின்றி முடிவுக்கு வந்தது. (ஐ)




# புதிய சாதனைகளை எட்டவுள்ள ரோஹித்

புதுடில்லி, ஜூலை 26

இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா 243 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி 9825 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 30 சதங்களும் 48 அரைச்சதங்களும் அடங்கும். 900 பௌண்ட்ரிகள் 275 சிக்ஸர்கள் அடித்துள்ள ரோஹித் சர்மா விரைவில் புதிய சாதனையை நிகழ்த்தவுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்கள் எடுக்க இன்னும் ரோஹித்துக்கு 175 ஓட்டங்களே தேவைப்படுகின்றன. மேலும் தொடக்க வீரராக மட்டுமே 156 போட்டிகளில் 7,807 ஓட்டங்கள் எடுத்துள்ளார். தொடக்க வீரராக 8,000 ஓட்டங்கள் அடிக்க இன்னும் 193 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன. தொடக்க வீரராக 8,000 ஓட்டங்கள் அடித்தவர்கள் பட்டியலில் ரோஹித் சர்மா 10ஆவது இடத்தில் உள்ளார். 9ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவின் ஹசீம் ஆம்லா (8,083) இருக்கிறார். இந்தப் படியலில் 15,310 ஓட்டங்களுடன் முதலிடத்தில் இருக்கிறார் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர்.

அடுத்து மேற்கிந்தியத் தீவுகளுடன் ஒருநாள் போட்டிகள் வரவிருக்கின்றன. மேலும் ஒருநாள் உலகக்கிண்ணப் போட்டிகளும் இருப்பதால் ரோஹித் சர்மா இந்தச் சாதனைகளை எளிதில் நிகழ்த்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் ரோஹித் சர்மா 6ஆவது, 7ஆவது வீரராகவே களமிறங்கி வந்தார். முன்னாள் இந்திய அணித் தலைவர் தோனிதான் ரோஹித்தை 2013இல் இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியில் தொடக்க வீரராக களமிறக்கினார். அதற்காக தோனி அப்போது மூத்த வீரர்களின் விமர்சனங்களை எதிர்கொண்டார்.

ரோஹித் சர்மா தொடக்க வீரராக அந்தப் போட்டியில் 83 ஓட்டங்கள் அடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது, தோனியின் முடிவு எவ்வளவு சரியாக இருக்கிறதென கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# மகளிர் உலகக் கிண்ணம் ஜேர்மனி கோல் மழை!

மெல்பர்ன், ஜூலை 26

மகளிர் உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் திங்கள்கிழமை ஆட்டத்தில், இரு முறை சம்பி யனான ஜேர்மனி அறிமுக அணியான மொராக் கோவை 6-0 கோல் கணக்கில் வீழ்த்தியது.

இதர ஆட்டங்களில் பிரேஸில் - பனாமாவையும் (4-0), இத்தாலி - ஆர்ஜென்ரீனாவையும் (1-0) வீழ்த்தின. 9ஆவது மகளிர் உலகக் கிண்ண உதைபந்து போட்டி, கடந்த 20-ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. போட்டியின் 5ஆவது நாளான திங்கள்கிழமை 3 போட்டிகள் நடைபெற்றன.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்ற குழு 'எச்' போட்டியில் ஜேர்மனி 6-0 கோல் கணக்கில் அபார வெற்றி கண்டது. அந்த அணிக்காக அலெக்ஸாண்ட்ரா பாப் (11', 39'), கிளாரா புகி (46'), லியா ஷுலெர் (90') ஆகியோர் கோல் அடிக்க, தவறுதலாக மொராக்கோ வீராங்கனைகள் ஹனானே ஹஜ் (54'), யாஸ்மின் மராபட் (79') தவறுதலாக 'ஒன் கோல்' அடித்தனர்.

உலகக் கிண்ணப் போட்டியில் ஜேர்மனி இத்துடன், கடந்த 20 போட்டிகளில் ஒன்றில்கூட தோற்கவில்லை. இதன்மூலம் உலகக் கிண்ண குழு சுற்றில் அதிகமான தொடர் வெற்றிகளை பதிவு செய்த அணியாக தனது வரலாற்றை நீட்டித்துக்கொண்டுள்ளது. மேலும், உலகக் கிண்ண போட்டியில் தனது 10 தொடக்க போட்டிகளில் 9-இல் வெற்றிருக்கிறது அந்த அணி.

அவுஸ்திரேலியாவின் ஹிண்ட்மார்ஷ் நகரில் நடைபெற்ற குழு 'எவ்' போட்டியில் பிரேஸில் 4-0 கோல் கணக்கில் பனாமாவை தோற்கடித்தது. அந்த அணிக்




காக அரிபோர்ஜஸ் 'ஹட்ரிக்' கோல் (19', 39', 70') அடித்தார். அத்துடன் பீட்ரிஸ் ஜானெராடோ ஜாவ் (48') ஒரு கோல் ஸ்கோர் செய்தார்.

உலகக் கோப்பை போட்டியில் பிரேஸில் தான் களம் கண்ட 9 முதல் போட்டிகளிலுமே வென்றிருக்கிறது. அவற்றின் மொத்த கோல் வித்தியாசம் 27-1 ஆகும். அறிமுக உலகக் கிண்ணப் போட்டியில், முதல் ஆட்டத்திலேயே ஹாட்ரிக் கோலடித்த 5ஆவது வீராங்கனை என்ற பெருமையை அரி போர்ஜஸ் பெற்றுள்ளார்.

மறுபுறம், பனாமா கோல் அடிக்காமல் தோல்வி காண, இந்த உலகக் கிண்ணப் போட்டியில் அறிமுகமான 8 அணிகளுமே தங்களது முதல் போட்டியை ஒரு கோல் கூட அடிக்காமல் நிறைவு செய்துள்ளன. (ஐ)




# ரூ. 10,624 கோடிக்கு எம்பாப்வேயை வாங்குகின்றது சவூதி கழகம்!

பாரிஸ், ஜூலை 26

பிரான்ஸ் நாட்டு உதைபந்தாட்ட வீரர் கிலியன் எம்பாப்பேவை சுமார் 33.2 கோடி டொலருக்கு வாங்க சவுதி அரேபிய நாட்டை சேர்ந்த அல் ஹிலால் உதைபந்தாட்ட கழக அணி முன்வந்துள்ளதாக தகவல் வெளியானது. இதனை பி. எஸ். ஜி. கழக அணி உறுதி செய்துள்ளது.

24 வயதான எம்பாப்பே, சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் பிரான்ஸ் நாட்டுக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் பிரதான முன்கள வீரராக அவர் உள்ளார். ரொனால்டோ, மெஸ்ஸி போன்ற வீரர்களை தொடர்ந்து அடுத்த தலைமுறையை சேர்ந்த நட்சத்திர ஆட்டக்காரராகவும் அறியப்படுகிறார். கழக அளவிலான போட்டிகளில் விளையாட அவர் தற்போது பி. எஸ். ஜி. அணியில் உள்ளார். அவருக்கான ஒப்பந்தம் அடுத்த பருவகாலம் வரை இருப்பதாக தெரிகிறது.

அந்த ஒப்பந்தத்தை நீட்டிக்க பி. எஸ். ஜி. முயன்றுள்ளது. ஆனால், எம்பாப்பே அதை நீட்டிக்க மறுத்து விட்டார் தகவல் வெளியானது. அதனால், அந்த அணியின் ஆசிய சுற்றுப் பயணத்துக்கான தொடரில் அவர் இடம்பெறவில்லை என சொல்லப்படுகிறது. அதோடு பி. எஸ். ஜி. அணியிலிருந்து அவர் வெளியேறுகிறாரா என்ற கேள்வியும் எழுந்தது.

இந்தச் சூழலில் சவுதி அரேபிய நாட்டை சேர்ந்த அல் ஹிலால் உதைபந்தாட்ட அணி அவரை ஒரு பருவ காலத்துக்கு சுமார் 33.2 கோடி டொலருக்கு வாங்க முன்வந்துள்ளது. இலங்கை ரூபாயில் இதன் மொத்த மதிப்பு சுமாராக 10 ஆயிரத்து 624 கோடி. இது உலக சாதனையாக பார்க்கப்படுகிறது.

போர்த்துக்கல் நாட்டின் உதைபந்து வீரர் ரொனால்டோ, சவுதி அரேபியா உதைந்தாட்ட கழகமான அல் நாசர் அணிக்காக தான் விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீனவர்களில் அதிகமானோர் நீச்சல் திறமையற்றவர்கள்!

## உயிர்காப்பு சங்கம் கூறுகிறது

**கொழும்பு, ஜூலை 26**

**நாட்டின் அநேகமான மீனவர்கள் நீச்சல்திறன் அற்றவர்கள் என்று இலங்கை உயிர்காப்பு சங்கம் தெரிவித்துள்ளது.**

**இலங்கை உயிர்காப்பு சங்கத்தின் தலைவர் அசங்க நாணயக்கார இதனை தெரிவித்துள்ளார்.**

அநேகமான மீனவர்கள் தங்களால் நீந்த முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர். எனினும், கடலில் அவர்களின் உயிர்களை காப்பாற்றும் அளவுக்கு அவர்களிடம் நீச்சல் திறமை இல்லை.

மீனவர்களுக்கு தொடர்ச்சியாக 10 நிமிடங்களில் 200 மீற்றர் நீந்தக்கூடிய திறன் அவசியம். இதுவே சர்வதேச தராதரம். உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 6 நிமிடங்களில் 200 மீற்றர் நீந்தக்கூடிய திறன் அவசியம்.

ஆழ்கடல் போன்றவற்றில் உயிர்காக்கும் பணிகளில் ஈடுபடுபவர்கள் ஒன்பது நிமிடங்களில் 400 மீற்றர் நீந்தவேண்டும். மீனவர்கள் உயிர்காக்கும் அங்கிகளை அணிவதில்லை.

அனைத்து படகுகளுக்கும் உயிர்காக்கும் அங்கிகள் போன்றவற்றை வழங்கியுள்ளோம். ஆனால், அநேகமானவர்கள் அவற்றை பயன்படுத்துவதில்லை பேரிடர் முகாமைத்துவ நிலையம் வழங்கியஉயிர்காக்கும் அங்கிகள் சிறந்த தரத்திலானவை. ஆனால் மீனவர்கள் எவரும் அவற்றை பயன்படுத்துவதில்லை. அவர்கள் எந்தக் கடலிலும் தங்களால் நீந்த முடியும் உயிர்காக்கும் அங்கிகள் அவசியமில்லை என கருதுகின்றனர்- என்றார்.

இதேவேளை, நாட்டில் நாளாந்தம் மூவர் கடலில் மூழ்கி உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# அமைச்சுகள் கிடைக்காததால் பெரமுன கட்சியினர் அதிருப்தி!

கொழும்பு, ஜூலை 26

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் அதிருப்தி அடைந்திருக்கும் மொட்டு எம்.பிக்கள் பலர் கட்சிப் பணிகளில் இருந்து விலகி இருக்கின்றனர் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் பஸில் ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைய மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் கண்டியில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

கண்டி - மஹியாவையில் அமைந்துள்ள லொஹான் ரத்வத்தையின் வீட்டில்தான் அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பில் இருந்து சாகர காரியவசம், நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்த்தன உள்ளிட்டவர்கள் கூட்டத்துக்காக அங்கு சென்றனர். ஆனால், கண்டியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. இதனால் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

# அரச செய்தி அறிவிப்புகளில்கூட இரட்டை கொள்கையே உள்ளது!

## மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, ஜூலை 26

ஒரு நாடு ஒரு கொள்கை என்று கூறிவிட்டு, அரச செய்தி அறிவிப்புகளில்கூட இரட்டைக் கொள்கை பின்பற்றப்படுகின்றது என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற “இனியும் வேண்டாம் கறுப்பு ஜூலை” என்ற சீர்திருத்தங்களுக்கான மக்கள் இயக்க கலந்துரையாடலிலேயே மனோ எம். பி. இதனைத் தெரிவித்தார்.

அங்கு சிங்கள மொழியில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்,

தற்போது ஜனாதிபதி விக்கிரமசிங்க, மத்திய வங்கி குண்டு வழக்கின் கைதிகளை பொது மன்னிப்பில் விடுவித்துள்ளார். அதுபற்றி அறிவிக்கும் சிங்கள ஊடகங்கள் மத்திய வங்கி குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட அழிவுகளை காணொலியாக தொலைகாட்சி செய்திகளில் நினைவுறுத்தி காட்டக் கண்டேன்.

உலகை உலுக்கிய கறுப்பு ஜூலை கலவரம் நடந்த நாட்கள். இதுபற்றியும் நினைவுறுத்தி, கறுப்பு ஜூலை கலவர எரிப்பு, அழிவு காட்சிகளை தேசிய ஊடகங்கள் காட்டவில்லை. ஏனெனில், கொழும்பு ஹவ்லக் நகரில் எங்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டது. பல வாகனங்கள் எரியூட்டப்பட்டன. புறக்கோட்டையில் எங்கள் வர்த்தக நிலையம் உடைத்து கொள்ளையடிக்கப்பட்டது. இவை எங்கள் தந்தை உழைத்து சம்பாதித்த சொத்துக்கள். எவரையும் ஏமாற்றி கொள்ளை அடிக்கப்பட்டவை அல்ல.

அவற்றையும் செய்திகளில் காட்ட வேண்டும் என நான் விரும்பவில்லை. எனக்கு பார்க்க விருப்பம் இல்லை. நினைக்கவும் விருப்பம் இல்லை. நான் வன்முறையை வெறுக்கிறேன். ஆனால், ஏன் இரட்டை கொள்கைகள் எனக் கேட்கிறேன். ஒரு நாடு ஒரு கொள்கை என்கிறீர்கள். அப்புறம் ஏன் செய்தி அறிவிப்பில் கூட இரட்டை கொள்கை?

1958, 1977, 1981 யாழ். நூலக எரிப்பு, 1983... இவை எது தொடர்பில் குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை. தண்டனை வழங்கப்படவும் இல்லை. இவை அனைத்துக்கும் காரணம் இவர்கள் சிங்களவர்கள். நாம் தமிழர். இது சிங்கள நாடு. பௌத்த நாடு. நாம் தமிழர். இந்த சிந்தனை மாறனும். முதலில் குற்றம், தவறுகள் ஏற்கப்பட வேண்டும். அதுதான் பொறுப்பு கூறல். ஆனால், எதுவும் இல்லை.

இப்படி பொறுப்பு கூறல் நாற, மறுபுறம் அரசியல் தீர்வு நாறுகிறது. 13 மைனஸ், ப்ளஸ் என்று நாறுகிறது. வழமையாக அரசாங்கம் இனப்பிரச்னைக்கு ஏதோ தீர்வை தரும் போது எப்போதும் எதிர்க்கும் வழமையான எதிர்க்கட்சி அரசியல் இனி இல்லை என்ற உத்தரவாதம் மட்டுமே என்னால் தர முடிகிறது. 1983 முடிந்து இந்த 40 வருடங்களில் இவ்வளவு தூரம்தான் நாம் வந்துள்ளோம் - என்றார்.

# காலி நகரில் 60 வீத மாணவர்கள் பேன் தொல்லையால் பாதிப்பு!

## பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

கொழும்பு, ஜூலை 26

காலி நகரத்திலும் அதனை அண்டிய பாடசாலைகளில் கற்கும் 60 வீதமான மாணவர்கள் பேன் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

பேன் தொல்லையால் அவர்களின் படிப்பு, தூக்கம் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

ருஹுணு பல்கலைக்கழக இணை சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் மற்றும் காலி மாவட்ட சுகாதார சேவைகள் அலுவலக அதிகாரிகள் இணைந்து காலி நகரில் 425 மாணவிகளிடம் இந்த ஆய்வை மேற்கொண்டதாக சமூக மருத்துவ நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார் .

கேள்வித்தாளை முன்வைத்து நடத்தப்பட்ட இந்த ஆய்வின் படி, 60வீத மாணவிகள் பேன்களால் கடுமையான பிரச்னைகளை எதிர்கொள்வது தெரிய வந்துள்ளது.

தலையில் உள்ள எண்ணெய் பசையை சுத்தம் செய்யாமை, தலையில் தங்கியிருக்கும் தூசி, தலையை சரியாக கழுவாமை போன்ற விடயங்களே தலையில் பேன்கள் வேகமாக பரவுவதற்கான காரணங்கள் என்று தோல் நோய் மருத்துவர் அச்சல லியனகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தென் மாகாண சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகள் இந்த பிரச்னையை அவசரமாக ஆராய்ந்து நிலைமையை சரிசெய்ய திட்டமிட்டுள்ளதாக சமூக நிபுணர் மருத்துவர் அமில சந்திரசிறி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நேற்றும் 4 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன!

கொழும்பு, ஜூலை 26

நேற்று காலை நான்கு அலுவலக ரயில்கள் இரத்து செய்யப்பட்டன என்று இலங்கை புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை முதல் சாரதிகள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு நேற்று முன்தினம் மாலை மீளப்பெறப்பட்டது. இருப்பினும், நேற்று காலை நான்கு ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் ஆறு புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரயில் சாரதிகள் முன்னறிவிப்பின்றி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள நேரத்தில் புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது சாத்தியமில்லை என்று அவர்கள் கூறினர். வேலை நிறுத்தம் காரணமாக ஞாயிற்றுக்கிழமை 21 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன, நேற்று முன்தினம் 65 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டன. ஆனால், தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலைநிறுத்தத்தை பிற்பகல் 3 மணியளவில் மீளப் பெற்றனர்.

இதேவேளை, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

# பெரமுனவினருக்கு அமைச்சுகளை வழங்கி குழப்பங்களை ஏற்படுத்த விரும்பவில்லை

## ஜனாதிபதி ரணில் தெரிவித்தாராம்

கொழும்பு, ஜூலை 26

மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள மொட்டுக் கட்சி எம். பிக்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளை வழங்கி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமான வர்களிடம் கூறியுள்ளார் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த தகவல்களின்படி, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான முதல் மொட்டுக் கட்சி எம். பிக்கள் 10 பேர் அமைச்சுப் பதவிகள் கேட்டு போராடி வருகின்றனர். இதனால் கடும் அதிருப்தியில் இருக்கும் அந்த 10 பேரும் ஒரு வருடத்தைக் கடந்த போதிலும் அமைச்சுப் பதவிகளுக்கான போராட்டத்தை இன்னும் கைவிடவில்லை.

கடந்த வாரம் அந்த 10 பேரில் ஒருவரான நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான போராட்டத்தைத் தாம் கைவிடவில்லை என்றும் தமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காவிட்டால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் கூறினார்.

இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குறித்த பிரதிநிதி தெரியப்படுத்தினார். இதற்கு, ஜனாதிபதி, “மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள அவர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை” - என்று தனது பிரதிநிதியிடம் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 13ஐ...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. எனினும், பொலிஸ், காணி அதிகாரங்களை பகிர்வது குறித்து உரிய பொறிமுறை அவசியம்.

சர்வக்கட்சி மாநாட்டில் சுதந்திரக் கட்சி பங்கேற்கும். அரசால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும்." - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## இந்தியாவின்...

- இந்தியாவின் முக்கியமான தேசிய பத்திரிகைகளில் ஒன்றான 'தி இந்து' இலங்கை ஜனாதிபதியின் பயணம் குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை தீட்டியிருக்கும் ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு கூறியிருக்கிறது.

"இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் கூட்டாக வெளியிடப்பட்ட 'தொலைநோக்கு ' அறிக்கையில் எதிர்காலத்துக்கான விரிவான திட்டங்கள் குறித்து விளக்கம் தரப்பட்டிருக்கின்ற போதிலும், விக்கிரமசிங்கவின் பயணத்தின் போது வெளியிடப்பட்ட எந்தவோர் எழுத்துமூல ஆவணத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை மதிப்பதாக இலங்கையால் முன்னர் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் பற்றியோ அல்லது இந்திய மீனவர்கள் கைது செய்யபடுவது தொடர்பிலான பிரச்னை குறித்தோ எதுவும் கூறப்படவில்லை" என்றும் தி இந்து சுட்டிக்காட்டியுள்ளது.

'இன்னமும் பூரணமாகவில்லை' (Still Incomplete ) என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்த ஆசிரியர் தலையங்கம் இலங்கையுடனான இந்தியாவின் உறவுகள் தமிழர் பிரச்னையால் பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது."

"பிரதமர் மோடி மாத்திரமே தனது உரையில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மாகாண சபை தேர்தல்களின் அவசியம் குறித்தும் இலங்கையின் தமிழ் சமூகத்தின் கௌரவமும் கண்ணியமும் கொண்ட வாழ்வை உறுதிப்படுத்த வேண்டிய தேவை குறித்தும் அழுத்தமான வேண்டுகோளை விடுக்கவேண்டி ஏற்பட்டது.

"ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கும் ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்ட காலமாக பதற்றத்துக்கு காரணமாக இருந்து வரும் இனப்பிரச்னையுடன் தொடர்புடைய இந்த விவகாரங்கள் குறித்து ஆராய்வதற்கு அவரின் அரசாங்கத்துக்கு 'தேர்தல் ஆணை' கிடையாது என்று தெளிவாகக் கூறியிருக்கிறது.

"விக்கிரமசிங்க டில்லியில் வெளியிட்ட கருத்துகளிலோ அல்லது கூட்டு அறிக்கையிலோ இந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதமையே இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் மூலமான மிகப்பெரிய செய்தியாக இருக்கக்கூடும்.

"புதுடில்லிமீது வேறு விவகாரங்களுக்காக இலங்கை தங்கியிருந்தாலும் கூட, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்னை தொடர்பான அதன் வரலாற்று ரீதியான அக்கறைகளை கொண்டு வருவதை இனி மேலும் இலங்கை விரும்பப்போவதில்லை என்பது உணர்த்தப்பட்டிருக்கிறது.

"இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலிமையான சகோதரத்துவ உறவுகள் நீடித்துவந்திருந்தாலும்கூட கடந்த காலத்தில் வரலாறு உறவுகளில் இடறல்களை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த பிரச்னைகளுக்கு இணக்கமான ஒரு தீர்வை உள்ளடக்காத எதிர்காலத்துக்கான எந்தவொரு நோக்கும் பூரணத்துவம் அற்றதாகவே கருதப்படும்", என்றும் தி இந்து கூறியுள்ளது. (ஐ)

## பாப்பரசரின்...

செல்வதாக இருந்தால்கூட மேலாடை கழற்றி செல்ல வேண்டும் என்பது ஆலய விதிமுறை. இன்றைய தினம் (நேற்று) பாப்பரசரின் பிரதிநிதியுடன் நானும் மேலும் ஒரு குருவும் நல்லூர் கந்தனை தரிசிக்க சென்றோம்.

உரிய நடைமுறைகளை பின்பற்றி ஆலய முன்றலில் நின்று தரிசித்துத் திரும்பிய எம்மை ஆலய நிர்வாகத்தினர் அழைத்து, மதகுருவின் ஆடையுடன் உள்ளே சென்று வழிபட முடியும் என்று கூறினர்.

அந்த அழைப்பை ஏற்று ஆலயத்துக்குள் நமது கிறிஸ்தவ மதகுருவின் ஆடையுடன் சென்று கந்தனை தரிசித்தோம். இந்த விடயமானது மத நல்லிணக்கத்துக்கான ஒரு முன்னுதாரணமாகும். அத்துடன், மத நல்லிணக்கத்துக்கான ஓர் ஆரம்பப் புள்ளி எனலாம். எதிர்காலத்தில் நாங்கள் அனைத்து மத மக்களும் ஒற்றுமையாக இணைந்து செயல்படுவதற்கான ஓர் ஆரம்ப புள்ளியாக இதனை நாங்கள் பார்க்கின்றோம் - என்றார். (ஐ)

## ஓகஸ்டில்...

அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த ரயில் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி கல்கிசையிலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வரை நடைபெறும். வார இறுதி நாட்களில் வெள்ளிக்கிழமைகளில் இரவு 10.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த சேவை சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் காங்கேசன்துறையை சென்றடையும்.

மீண்டும் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு தொடங்கி அதிகாலை 5.00 மணிக்கு கல்கிசையை வந்தடையும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## சுதந்திர...

.தமிழ்த் தேசிய கட்சி பொது செயலாளருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலை கல வரத்தின்போது சிறையில் படுகொலை செய்யப் பட்ட போராளிகளான குட்டிமணி, தங்கதுரை உள்ளிட்ட 53 பேரின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று அவரின் பணி மனையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்திலே எங்களை நாங்களே ஆளக்கூடிய ஒரு தீர்வு வென்றெடுக்கப்பட வேண்டும். சுதந்திர தமிழீழமா? இல்லையா? என்ற சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். புலம்பெயர்ந்தவர்கள்கூட வாக்களிக்கக்கூடியவகையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இதை விடுத்து இலங்கைக்குள் எந்தத் தீர்வும் இல்லை. அவர்களிடம் கொஞ்சிக் குலாவுவதற்கோ அல்லது எலும்பு துண்டுகளை நக்குவதற்கோ நாங்கள் தயாராக இல்லை என்பதை ஈழத் தமிழினம் உறுதியாக தெரிவிக்க வேண்டும். இதன்மூலம்தான் புலம்பெயர் தேசத்திலே இருக்கக்கூடிய அமைப்புக்கள், அந்தந்த நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஆட்சியாளர்களையும் பொது சன வாக்கெடுப்பு தீர்மானங்களை அந்ததந்த நாடுகளின் பாராளுமன்றங்களிலும் சபைகளிலும் எங்களுடைய தாய் தமிழகத்திலும் நிறைவேற்றக் கோர முடியும்.

இதேபோல தாயகத்தில் இருக்கக் கூடிய எல்லோரும் ஒருமித்த குரலிலே இதை வலியுறுத்தும்போதுதான் எங்களின் விடுதலை கிடைக்கும் - என்றார்.

# நினைவேந்தல் நிகழ்வுகளால் உயிரிழந்தோரை எழுப்பமுடியாது!

### கம்மன்பில, விமல் கூறுகின்றனர்



கொழும்பு,ஜூலை26

"நினைவேந்தல் நிகழ்வுகளால் உயிரிழந்தவர்களைத் தட்டி எழுப்ப முடியாது. எனவே, இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் நினைவேந்தல்களை நிறுத்துமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம்."

- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்தனர்.

கொழும்பில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் குழப்பியடிக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

"ஜூலையில் குருதிக்களரியை ஏற்படுத்தியது விடுதலைப்புலிகள்தான். வடக்கில் படையினர் மீது புலிகள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்தான் தெற்கில் மோதலாக வெடித்தது. அந்தச் சம்பவத்தை மறக்க வேண்டிய நிலையிலிருக்க வேண்டிய நாம் மீண்டும் அதை நினைவுபடுத்தும் வகையில், ஒரு குழப்பத்தை விரும்பும் வகையில் நினைவேந்தல் என்ற பெயரில் கலவரத்தை ஏற்படுத்த முனைவதை ஏற்க முடியாது.

கொழும்பு நினைவேந்தலை வேண்டுமென்றே ஏற்பாடு செய்துள்ளனர். இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் நிதி உதவியுடன் இயங்குபவர்கள். உயிரிழந்த புலிகளையும் (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்) நினைவேந்தும் இந்தக் குழுதான் நேற்றுமுன்தினம் அந்த நிகழ்வையும் நடத்தியது. இதுதான் எமது மக்களின் ஆத்திரத்துக்குக் காரணம்.

இப்படியான நினைவேந்தல் கொழும்பில் தேவையற்றது. வேண்டும் என்றால் அதை வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் நடத்தட்டும்.

அமைதியான தலைநகர் கொழும்பை குருதி ஆறு ஓடும் பூமியாக மாற்ற முயலும் தரப்பினர் நாட்டின் இன ஒற்றுமை கருதிச் செயல்பட வேண்டும்." - என்றனர். (ஐ)

## 10 தொழில்...

வலயங்கள், பொறியிலாளர், போக்குவரத்து தொழிற்சங்கங்கள் என்பன கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இன்று ஒன்றுகூடிய போது பொலிஸார் நீதிமன்ற உத்தரவை அறிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் இதன் போது தெரிவித்தனர்.

எனினும், அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட நடவடிக்கை எடுத்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

பின்னர், அவர்கள் நிதி அமைச்சை நோக்கி பயணிக்க முயற்சி செய்தபோது, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. பொலிஸாரின் இடையீட்டைத் தொடர்ந்து அவர்கள் கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் கலைந்து சென்றனர். (ஐ)

## பொலிஸ்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன் தினம் சந்தித்து பேசிய போது இதனை வலியுறுத்தியதாக கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கூறினார்.

மாகாண அரசாங்கத்திடமிருந்து பறிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்த முன்மொழிவொன்றை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அது குறித்து ஆய்வுக்குட்படுத்த ஐவர் அடங்கிய விசேட குழுவொன்றை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்து ஐந்து பேரின் பெயர்களையும் பரிந்துரைத்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

"இந்தியாவின் பாண்டிசேரியில் ஆயுதங்கள் இல்லாத பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் ஆயுதங்களுக்கு பதிலாக தடிகளை மாத்திரமே கையில் வைத்திருப்பார்கள்.

ஆயுதங்கள் இல்லாது பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்தேன். இந்த நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அக்கறையுடன் செயல்படுவதை அவதானிக்க முடிகிறது" என்றார். (ஐ)

## ஏமாற்று

வெளியேறும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியல் ஏமாற்று வித்தைகள் இல்லாமல் சரியான முறையில் கலந்துரையாடலுக்கு ஜனாதிபதியும் அரசும் வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் பிபில மெதகம தேசிய பாடசாலைக்கு பேருந்து வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஐக்கிய மக்கள் சக்திக்கு கலந்துரையாடலுக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இது சர்வ கட்சி மாநாடு என்று அறியக் கிடைக்கின்றது. தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இடையே பொது நிகழ்ச்சி நிரல், வேலைத்திட்டம், கருத்து ஒற்றுமை, கூட்டுப் பொறுப்புடன் ஒரு கருத்துடன் செயல்படும் நிலைப்பாடுகள் இல்லை.

நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி இந்தக் கலந்துரையாடலுக்குச் சென்றாலும், இந்தக் கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில் அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு வெளியேறும்.

அரசின் பேச்சு நேர்மையுடன் நடந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். வெற்றிபெற வேண்டுமானால் பேச்சுகள் தூய்மையான நோக்கத்துடன் நடக்க வேண்டும். அது அரசியல் ஏமாற்று வித்தையாக இருக்கக்கூடாது. நாட்டு நலனுக்காகச் செய்யப்படும் பணியாக பேச்சு அமையப் பெறுவதாக இருக்க வேண்டும்.

அரசிடம் தெளிவான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இந்தக் கலந்துரையாடல்களுக்கு நாம் அழைக்கப்பட்ட போதிலும், நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் குறித்து எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை. நாட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் பக்கம் இருந்து எதிர்க்கட்சி இதில் கலந்துகொள்கின்றது.

இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 134 உறுப்பினர்களுக்கும் இடையில் பல கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. கலந்துரையாடலுக்கு வருவதற்கு முன்னர் கருத்து வேறுபாடுகளைச் சமாளித்து ஒரு நிலைப்பட்ட கருத்தொற்றுமைக்கு அவர்கள் வரவேண்டும்." - என்றார்.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# 13ஐ நீக்கி 22ஐ கொண்டுவருவது நாட்டை பாதாளத்துக்குள் தள்ளும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி.



மன்னார், ஜூலை 26

**இலங்கையில் நடைமுறையில் உள்ளது என்று சொல்லப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கி, அரசியல் யாப்பில் 22ஆவது யாப்பு மாற்றம் வருமானால், அது முற்றுமுழுதாக இலங்கை படுபாதாளத்துக்கு தள்ளுவதாகவே இருக்கும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள அவரின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் நடைமுறையில் இருக்கும் என்று சொல்லப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கி இலங்கையின் அரசியல் யாப்பில் 22ஆவது யாப்பு மாற்றமாக புதிய சட்டத்தை கொண்டு வரவிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கூறியிருக்கிறார்.

அப்படி ஓர் எண்ணப்பாட்டுக்கு அவர்கள் வருவார்களாக இருந்தால் அது முற்று முழுதாக இலங்கை படுபாதாளத்துக்கு தள்ளப்படும் நிலைமையாகத்தான் இருக்கும். தமிழர்கள் இயக்கர்கள், நாகர்களாக இலங்கையின் தேசிய இனமாக பூர்வீகக்குடிகளாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கு உரித்து இருக்கிறது. வடக்கு - கிழக்கில் இருக்கின்ற மக்களினுடைய எண்ணக்கருக்களுக்கு அமைவாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாகவோ கருத்துக்கணிப்பு ஊடாகவும் அவர்கள் விரும்புகிற ஆட்சி முறையில் இருக்கும் உரித்து அவர்களுக்கு இருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் கொண்டு வரப்பட்டது. ஆனால், அது கூட முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எங்களை பொறுத்த வரையில் 13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக தமிழர்களுக்கு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை. தமிழர்களுக்கு தீர்வு கிடைப்பதாக இருந்தால் ஒற்றையாட்சி முறை முதலில் ஒழிக்கப்பட வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டு வரப்படும் போது அது தமிழர்களுக்கு தீர்வாக அமையாது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, அவரது கருத்தை எதிர்க்கிறேன் - என்றார். (ஐ)

# கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி நேற்றும் தடுக்கப்பட்டது!



வடமராட்சி, ஜூலை 26

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இரண்டாவது நாளாக நேற்றும் கடற்படைக்கு காணி அளவிடும் முயற்சி தடுக்கப்பட்டது.

தனியார் ஒருவருக்கு சொந்தமான 15 பேர்ச் காணியை கடற்படைக்கு சுவீகரிப்பதற்காக நில அளவை திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் வருகை தந்தது.

அவர்களை மறித்த காணி உரிமையாளர், கிராம மக்கள், அரசியல்வாதிகள் இது எங்களுடைய சொந்த காணி, இதனை அளவீடு செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அவர்கள் வெளியேறினர்.

இந்நிலையில், இரண்டாம் நாளாக நேற்றும் நில அளவைத் திணைக்களம் அந்தப் பகுதிக்கு சென்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# கிராமங்களுக்கு பெரமுன கட்சியினர் செல்ல முடியாத நிலை மாறிவிட்டது!

## எஸ். பி. திஸாநாயக்க



கொழும்பு, ஜூலை 26

எதிர்வரும் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் போட்டியிடுவோம். நாம் தேர்தல் தொடர்பில் அச்சமடையவில்லை. அன்று அச்சமடைந்தோம். அச்சத்தோடு மாத்திரம் இருக்கவில்லை. கிராமங்களுக்குக் கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது. அந்த நிலைமை தற்போது அவ்வாறில்லை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நெலும் மாவத்தையிலுள்ள கட்சி தலைமையகத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினர். இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன என்ற ரீதியில் பொறுப்புகளை சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வழங்குமாறும் கோரினோம். இருப்பினும், அவர்கள் வழங்கவில்லை. இது தொடர்பில் நாம் கவலையடைகிறோம். தற்போது நடைமுறையிலுள்ள வேலைத் திட்டங்களுக்கு வலுசேர்க்கும் நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

எதிர்வரும் தேர்தல்களில் சிறீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் போட்டியிடுவோம். மேலும் நாம் தேர்தல் தொடர்பில் அச்சமடையவில்லை. இருப்பினும், நாம் அச்சமடைந்தோம். அச்சத்தோடு மாத்திரம் இருக்கவில்லை. கிராமங்களுக்கு கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

மரண வீடுகளுக்குக்கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அவ்வாறில்லை. எமது தரப்பினர்கள் சுதந்திரமாக கிராமங்களுக்கு சென்று மக்களுடன் வாழ்கின்றனர் - என்றார். (ஐ)



# மட்டு. விவசாயிகள் ஆரம்பிக்கவிருந்த உண்ணாவிரத போராட்டம் நிறுத்தம்!

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு விவசாய அமைப்புக்கள் வேளாண்மை செய்த சிவப்பு, வெள்ளை நெல்களை கொள்வனவு செய்யுமாறு கோரி மாவட்ட செயலகத்தின் முன்பாக செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்க இருந்த சுழற்சிமுறை உண்ணாவிரதம் கிழக்கு மாகாண ஆளுநரின் உறுதி மொழியையடுத்து கைவிட்டுள்ளதாக விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் நீட்டின சிவப்பு, வெள்ளை மற்றும் போமை நெல்லினங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலையில் அரசாங்கம் சம்பா நெல்லை மாத்திரம் கொள்வனவு செய்கின்ற நிலையில் அதிகமாக வேளாண்மை செய்கையான ஏனைய நெல்களை கொள்வனவு செய்ததையிட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அரசாங்கம் உற்பத்தி செய்த ஏனைய இன நெல்களை கொள்வனவு செய்யுமாறு கோரி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகம் முன்பாக சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருக்க தீர்மானித்தனர்.

இந்த நிலையில், நேற்று மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெற இருந்தமையால் அங்கு பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாவட்ட செயலகத்துக்குள் நுழைவோரை தீவிரமாக சோதனையிட்டனர். இதனால், விவசாயிகள் உள்நுழைவது தடுக்கப்பட்டது.

இந்த நிலையில், மாவட்ட செயலகத்தின் வெளிவாசலில் காத்திருந்த நிலையில் அங்கு வந்த இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் விவசாயிகளுடன் உரையாடி அவர்களை கிழக்கு மாகாண ஆளுநரிடம் கூட்டிச் சென்று கலந்துரையாடினார்.

இதன் பின்னர் மாவட்ட அபிவிருத்தி குழுகூட்டத்தில் நெல் கொள்வனவு தொடர்பாக தீர்மானம் கொண்டுவந்து ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவருவதாக ஆளுநர் வழங்கிய வாக்குறுதியையடுத்து விவசாயிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறினர். (ஐ)

# தனிநாடு கோரி மீண்டும் நாட்டில் இரத்தகளரி ஏற்படுத்தவா கஜேந்திரகுமார் முயல்கிறார்?

## சரத் வீரசேகர எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

தனிநாடு கோரி நாட்டில் மீண்டும் இரத்தக் களரியை ஏற்படுத்தவா கஜேந்திரகுமார் முயல்கின்றார் என்று கேள்வி எழுப்பியுள்ளார் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சி கோருகின்றார்களா? தனி நாட்டைக் கோருகின்றார்களா? என்பதை அறிய துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் சரத் வீரசேகர எம்.பி. ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“இந்தக் கருத்தை முன்வைக்கும் கஜேந்திரகுமார் எந்த நாட்டிலிருந்து கூறுகின்றார் என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். தனிநாடு கோரிய விடுதலைப் புலிகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும்.

விடுதலைப்புலிகளின் இந்த அபரிமித ஆசையால் தான் பெருமளவான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழக்கவேண்டி வந்தது.



மீண்டும் தனி நாடு கோரி குருதிக்களரியை ஏற்படுத்த கஜேந்திரகுமார் விரும்புகின்றாரா? இது ஒற்றையாட்சியுள்ள பௌத்த - சிங்கள நாடு. இங்கு சமஷ்டிக்கோ, தனிநாட்டுக்கோ இடமில்லை.” - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.